# புகழ் மலர்கள்

## வாழ்க பெரியார்

வருக! வருக! வண்டமிழ் நாட்டின்
பெருகுசீர்த் தந்தையே பெரியாரே வருக!
சாதிக் காதரவு தரும்ஓர் ஏட்டினைத்
தீக்கிரை செய்க என்றது தீதென்று
திங்கள் ஆறு சிறையில் இட்டனர்.

அழிந்துகொண்டேவரும் நேருவின் அரசினர்
தீயர் தீர்ப்புக்கு மகிழ்ந்தீர் ஆயினும்,
உங்கள் உயிர்நிகர் அன்புத் தொண்டர்
நாலா யிரவரைச் சிறையில் நசுக்கி
அவரில் எழுவரின் ஆவி குடித்ததை
எண்ணி எண்ணி இருந்த சிறையெலாம்
கண்ணீராக்கிக் கதறினீர், அதனையாம்
நினையா திருக்க முடிய வில்லை,
நினைதொறும் நெஞ்சு பொறுக்கவில்லை.

வருக ஐயா! நன்றே வருக!
நரிவடவர்க்கும் நமக்குமாம் தொடர்பைத்
திருகிப் புய்க்கச் சிலநாள் செல்லும்
வெட்டிப் பிரிக்க வேண்டும் நொடியில்!
இருநூ றாயிரம் பேர்கள் இங்குளோம்
நல்கும் திட்டப் படியே நடப்போம்!
உயிர் பெரிதன்று, பெரிதன் றுடைமை,
வெற்றி பெரிது! மனத்தில்
உற்றது வெல்க! தமிழ் நாடு வாழ்வே!

## நான்கண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ஒற்றைக்கால் மன்றம் கலைக்கழகம்! உள்ளிருந்தேன்
கற்கு மணிக் கோயில்கள் கண்டு மகிழ்—வுற்றேன், பின்
அண்ணா மலைப்பல் கலைக்கழகம் அன்றளித்தார்
எண்ணத்தை எண்ணினேன் நான்.

தஞ்செல்வம் எண்ணிய அண்ணலார் தண்ணருள்சேர்
நெஞ்சினில் நாட்டின் நிலைகண்டார்—பஞ்சம்

அலைக்கா தறிவு பெற அண்ணா மலைப்பல்
கலைக்கழகம் கண்டார் இனிது.

வழுத்தவும் வாழ்த்தவும் வண்டமிழர் நாப்பண்
பழுத்த பழமர மாக—இழைத்துயர்ந்த
அண்ணா மலையார் அறத்தை நொடிதோறும்
எண்ணாம லாஇருக்கும் நாடு?

அண்ணா மலைப்பல் கலைக்கழகக் கட்டடத்துக்
கெண்ணா யிரந்தொழில் வல்லவர்—நண்ணினார்
கண்ணம்மரம் கோடி வண்டி தூய்கடைக்கால்
ஒன்றேஅஃது
அண்ணா மலையரசர் அன்பு.

இலைஎன்றார்க் கீதல் அறிவுக்கண்ணான
கலை ஈத லே என்று கண்ட நலம்னிதர்
அண்ணா மலையரசர் அன்னார் வழிகாட்டும்
புண்ணியமும் பெற்றது நாடு.

அங்கங்குக் கல்வி அறஞ்செய்தார் உண்டெனினும்
திங்கள்விண் மீன்களிடைச் சேராமை—இங்கறப்
பல்கலையை மாணவர்கள் மொண்டுண்ணப் பாற்கடலை
நல்கலுக்கும் ஈடுண்டோ நாடு.

அந்தஅண் ணாமலைக்கும் மக்களின் அன்பரசர்
இந்த அண் ணாமலைக்கும் வேற்றுமை என்—?அந்தமலை
நாளைக்கே செத்தால் நலம்செய்யும், இஃதிந்த
வேளைக்கே கல்வி விளக்கு.

அண்ணா மலைக் கழகம் அன்றவர்தாம் நாட்டிலரேல்
இந்நாள் தமிழர் நிலைஎன்னாம்—திண்மை
நெறியேது? நெஞ்சில் உரமேது? நாட்டார்
அறிவோ உலக்கைக் கொழுந்து.

மனிதரில் நல்ல மனிதர், மதிக்கின்
புனிதரில் மிக்க புனிதர்—இனிதாக
நல்கலில் நல்கல் அறிவென்றார், அண்ணலார்
பல்கலை மன்றம் படைத்து

இங்கு விடுதலை! இங்கின்பம்! அல்லாமல்
அங்கென்ன என்றே அறிவிப்பார்—செங்கதிர்
காணவர்! அண்ணா மலைப்பல் கலைக்கழகம்
மாணவர் வாழ்வின் பயன்.

## செட்டிநாட்டரசர் முத்தையா

துப்பாக்கி யின்வயிற்றில் பீரங்கி தோன்றியது
மெய்ப்பாக்கி வேந்தரண் ணாமலையார்—இப்பார்க்கு
முத்தையா வைத்தந்தார் மூத்தோரும் என் அறிவின்
சொத்தையா என்னும் படி.

செட்டிநகர் வேந்தர் அறிவுநீர்த் தேக்கத்தை
எட்டி நகராமல் இயற்றினார்—ஒட்டி
அரசர் முத்தையா அதுகாப்பா ரானார்
இருவிழியைக் காக்கிமை போல்.

அண்ணா மலைப்பல் கலைக்கழகம் அன்றளித்த
அண்ணா மலையரசர் ஆசையினைக்—கண்ணாகக்
கொண்டுநிறை வேற்றிவரும் கோமகன், முத்தையாவின்
தொண்டென்றும் தூண்டா விளக்கு.

தமிழ் சைஇ ராசா சர் அண்ணா மலையார்
அமிழ்திவர் ஆயினும் நாட்டில்—கமழும்
கலைத்தோட்டக்காரர்; கருங்குளவிச் சாதி
அலைத்தோட்ட அஞ்சா தவர்.

வாணிகத்தில் எவ்வெத் துறைகள்? வடித்ததமிழ்
மாணவர்க் கெவ்வெத் துறைகள்? எலாம்—பேணுகென்றே
அப்பா உரைத்தார், அதனை முத் தையாவோ
முப்பதுபங் காக்கினார் மூத்து

துணைவேந்தர், தூய இணைவேந்து யார்க்கும்
அணைவேந்தி ஆட்சியைக் காக்கத்—துணையேந்தும்
வில்லுக்கும் வேந்தர், பொருள்வேந்தர், முத்தையா
கல்விக்கும் வேந்தரே காண்

கடுநிலைமை எத்தனை அத்தனை யுள்ளும்
நடுநிலைமை நல்லுயிரே என்பர்-வடுவற்ற
இன்சொல் உடையார்; எழிலரசர் முத்தையா
வன்சொல் வழங்கலறி யார்,

பயிரும் பயனுழவும் போல் முத்தை யா தம்
உயிரும் தமிழ்மொழியும் ஒன்றென்று—அயராது
நாளும் உழைப்பவர்; நாம்தமிழர் எல்லாரும்
கேளும் கிளையுமே என்று.

தங்கா தியங்கியிலே தம் துரைத்த ணப்பணியாய்
எங்கே பறந்தாலும் இங்கிருப்பார்—மங்காத

அண்ணா மலைப்பல் கலைக்கழகம் முத்தையா
எண்ணாத நேரமி ராது.

செட்டிநாட் டண்ணல் திருமகனார் முத்தையச்
செட்டிநாட் டண்ணல் திறம்வாழ்க—அட்டியின்றிப்
பல்லாண்டு வாழ்கவே, பன்மக்கள் பேரர்கள்
செல்வம் புகழிற் சிறந்து.

## துணைவேந்தர் நாராயணசாமி

சோரா துழைக்கும் துணைவேந்தர்; நம்தமிழர்
நாரா யணசாமி நல்லவர்: பாரினிலே
அண்ணா மலைப்பல் கலைக்கழக அன்னைக்குக்
கண்ணாவார்; கல்விக் கடல்.

அண்ணா மலைப்பல் கலைக்கழகத் துக்கும் அதில்
நண்ணினார்க்கும் நாரா யணசாமி-வண்டமிழக்கும்
பண்டைக்குப் பண்டைத் தமிழர்க்கும் ஆற்றுவதோர்
தொண்டுக்கும் வாய்த்த சுடர்.

பெரிய நிறுவனங்கள் மன்றங்கள் பேணி
அரிய சொல் செய்த ஆற்றல்-தெரியுங்கால்
நாராயண சாமிக்கு அண்ணா மலைக்கழகம்
ஓர்ஏர் ஒருநாள் உழவு!

அண்ணா மலைப்பல் கலைக்கழக நல்லாட்சி
பண்ணினார் பல்லோர் எனினுமே-அண்ணலார்
நாரா யணசாமி நல்லுளத்தின் அன்பாற்றல்
பார றிந்த பச்சை விளக்கு.

அண்ணா மலைக்கழகம் ஆளும் நராயணனார்
எண்ணமும் ஆற்றலும் ஈடிலவாம்-எண்ணத்தில்
பள்ளம் படுகுழி இல்லை; பணியாற்றும்
உள்ளம் உறங்காப் புலி.

சினந்தாரை அன்பால் திருத்துவார்: இன்சொல்
மனத்தூய்மை வாய்ந்தவர்; கோளால்—திணைபணையாம்
காட்டுக்கும் காதுகொடார்; நாராயணசாமி
நாட்டுக்கும் நல்ல துணை.

வகுப்புப் பெறவந்த மாணவரிற் சில்லோர்
புகப்பெற்றார் மற்றுப் புகாத—மிகப்பலரின்
கண்ணூரைக் கண்டழுத நாராயணசாமி
கண்ணீரும் காவிரி ஆறு.

கலைத்துறைவ குப்புகள் காணின் சிலவே
புலவர் திருக்கூட்டம் போதா-நிலைபெருக்கல்
எந்நாளோ என்றழுத நாராயணசாமி
இந்நாளை எண்ணிநகைத் தார்.

அல்லலிலா தண்ணா மலைப்பல் கலைக்கழகம்
சில்லாண்டு காத்த திறம்போலப்-பல்லாண்டு
காக்க நாராயணனார் என்பது நம் கருத்து.
நோக்கஇதை நூறுமுறை வேந்து.

துணைவேந்தர் நாரா யணசாமி தொண்டே
இணையற்ற தாகி இனியும்-அணையா
விளக்காக! அண்ணா மலைப்பல் கலையின்
ஒளிக்காக வாழ்க உயர்ந்து!

## பதிவாளர் மீனாட்சி சுந்தரனார்

ஆயிரம்பேர் எண்ண அலைகட் கிடையிலும்
தாயினும் அன்பு தலழ்மொழியே-வாய் உருக்கும்
பண்பாளர் பதிவாளர் மீனாட்சி சுந்தரனார்
அண்ணா மலைஅடைந்த பேறு.

எண்ணம், இயக்கம், செயல் முடிபெல் லாம் பதிவு
பண்ணும் பறந்த துறைத்தலைவர்,-நண்பார்ந்த
மீனாட்சி சுந்தரனார்க் கிடு விளம்பில்அந்த
மீனாட்சி சுந்தரனார் தாம்.

அண்ணா மலைப்பல் கலைக்கழக ஆக்கத்திற்கு
உண்ணாதும் சற்றேனும் ஓய்வுபெற-எண்ணாதும்
முப்போது மேஉழைக்கும் மீனாட்சி சுந்தரத்தை
எப்போதும் ஏந்தும் உலகு.

தமிழ் மூன்றும், ஆங்கிலம் ஒன்றும், தமிழர்
நமர் என்னும் நண்பும் அவர் உள்ளம்!-கமழும்
பதிவாளர் மீனாட்சி சுந்தரனார் பாரில்
மதியாளர் மொய்க்கும் மலர்.

தலைவர் வலக்கை! தமிழ் படை வீடு!
கலைஞர்க்கும் மாணவர்க்கும் காவல்-புலன்களெலாம்
பெய்த்த பதிவாளர் மீனாட்சி சுந்தரனார்
பத்தரைமாற் றுப்பசும் பொன்.

எந்நாள் பதிவாள ராகி இவண் வந்தார்
அந்நாள் தொடங்கிற்றாம் அந்தமிழர்-பொன்னாள்

பதிவாளர் மீனாட்சி சுந்தரனார் பாரோர்க்கு
உதவிசெயும் உள்ளத் தவர்.

அறத்தாற்றில் செல்லும் அடியைப் பெயர்த்துப்
புறத்தாற்றில் வையாப் புனிதர்-இறப்பினும்
அண்ணா மலைப்பல் கலைக்கழக அன்னைதான்
எண்ணா நாள் இல்லாத நாள்.

வாழவைக்கும் அண்ணா மலைப்பல் கலைக்கழகம்
வாழவைக்க வந்த மருந்தனையார்-வாழவைக்கும்
செந்தமிழர் செல்வர் பதிவாளர் மீனாட்சி
சுந்தரனார் அன்பின் சுரப்பு.

அண்ணா மலையரசர் பேர் வாழ்க! அன்பளிப்பாம்
அண்ணா மலைப்பல் கலைக்கழகம் - நண்ணுகலைத்
தேனாக்கும் ஆசிரியன் மார் வாழ்க! வாழ்கவே!
மீனாட்சி சுந்தர னார்!

என்றும் மனைமக்கள் சுற்றத்தி னோடுதாம்
நன்று புகழ்ஏந்தி நானிலத்தின் - முன்தோன்றும்
செந்தமிழ்க் குத் தொண்டு செய்து சீர் ஆர்த்து மீனாட்சி
சுந்தரனார் வாழ்கநலம் தோய்ந்து!

## பேராசிரியர். லெ. ப. கரு இராமநாதர்

பேரா சிரியர் இராம நா தஞ்செட்டி
யார் என்றால் யார்என்று கேட்பார்யார்?—பாரினிலே
பூவென்றால் தாமரைதான். பொன்னென்றால் தங்கம்தானே
யாவர் லெ. ப, கருவென்னார்?

தமிழாற் பிறந்து தமிழால் வளர்ந்து
தமிழாற் சிறந்த தமிழர் - தமிழ்ப்புலமை
நண்ணீரோ என்னும் இராமநாதன் தொண்டே
அண்ணா மலைக்கு விளக்கு

மாற்றவர் நெஞ்ச வயலும், தமிழ்விளைத்தல்
காற்றும் கடும்புனலும் சாய்க்காமே - ஆற்றலால்
என் புரிந்தும் காக்கும் இயல்புடையார், செந்தமிழ்
அன்பர் இராமநாதர்.

குரங்கிருக்கும் குள்ள நரியிருக்கும் சான்றோர்
அரங்கியிருக்கும் மாணவர் ஆர்க்கும் - இரங்கியருள்
பேராசிரியர் லெ ப. கரு. அண்ணாமலைக்கே
ஓராசிரியர்; உயிர்!

கழுக்கம்பம் ஏற்றப் படினும் - கடுகும்
ஒழுக்கம் பிழையா ஒருத்தர் - கொழுக்கத்

தமிழ் மேய்க்கும் சான்றோர் இராமநா தர்தாம்
தமக்கன்று; வாழ்வு தமிழர்க்கு

## புலவர் வெள்ளை வாரணனார்

மல்கு புகழ்வெள்ளை வாராணனார் மாணவர்க்கு
நல்கு தமிழ்எல்லாம் நல்லதமிழ்!—பல்குசீர்
அண்ணா மலையில் அயலார் நெறிதழுவ
எண்ணாத் தமிழ்ப்புலவர் ஏறு.

இலக்கணம் மற்றும் இலக்கியம் ஆன
வலக்கணும் மற்றது மாகத்—துலக்கமுறும்
வாரணம், வஞ்சகர்க்கே அஞ்சாமை கொண்டதுதான்
காரணம் கண்ட புகழ்க்கு.

தந்தமிழ்த் தொண்டுண்டு தாமுண்டென் றெண்ணாதார்
செந்தமிழ் மேன்மை திரிக்கின்ற—எந்த
நரிக்கும் புலிவெள்ளை வாரணனார் நன்கு
விரிக்கும் விரிவுரை வேந்து.

அண்ணா மலைப்பல் கலைக்கழகத் தொண்டாற்ற
நண்ணிய நாள்முதல் இன்று மட்டும்—கண்ணான
மாணவர்தம் நெஞ்சத்தை, நம் வெள்ளை வாரணனார்
கோணவைத்தார் என்பதுபொய்க் கூற்று.

எப்பேடு பண்டைத் தமிழை இழித்துரைக்கத்
தப்பேடு காட்டினும் தாக்கும் அவர்—செப்பேடு!
மாசறுக்கும் நம்புலவர் அண்ணா மலையென்னும்
பாசறைக்கு யானைப் படை.

யார்எனினும் நேர்வருக என்தமிழே வையத்தின்
காரணம் என்றெடுத்துக்காட்டெண்பால்—வாரணத்தின்
தெம்புண்டு! வாயாடி செய்வர்க்கு வாரணத்தின்
கொம்புண்டு குத்தும்ஒரே குத்து.

இவர் போன்றார் ஏழெட்டுப் பேரிருந்தால் என்றன்
கவலை ஒழியுமென்று காட்டி—நுவலும்
அவள்தானே நம்தமிழ்த்தாய்! அன்பால் குறிக்கும்
அவர்தாமே வெள்ளானை யார்!

சிரகம் பூண்டு சிறுகடுகும் இக்காயம்
தீர்வெந் தயங்கோம் செந்தமிழ்க்கே—பார்என்று
நெஞ்சுக்கு நீயு மிளகென்னும் வாரணம்
மஞ்சட்கண் ணுக்குமஞ் சள்,

இருக்கும் மனையார் இருப்பார்) இளையர்
இருப்பார், எனில் உலகம் வானும்—இருக்குமட்டும்!

வல்வெள்ளை வாரணனார் நீடுழி வாழ்கவே
செல்வச் செந்தமிழ் போல்.

மண்ணும் மலையாகும் வாழ்வார்க் குணர்வளிக்கும்
அண்ணா மலைப்பல் கலைக்கழகம்—எந்நாளும்
வாழுமடா மாணவர்க் கின்னும் பெரிதாகிச்
சூழுமடா தூய நலம்.

## ஞா. தேவநேயப் பாவாணர்

செந்தமிழ்ச் செல்வச் சிறப்பும். திருநாட்டில்
வந்தே றிகள் அடிக்கும் வாய்ப்பறையும்—இந்தாபார்
என்னும்பா வாணர், எவன் எவ் விடர் செயினும்
இன்னும் பார் என்னுமடல் ஏறு.

ஆதி மொழிஎன் அருமைத் தமிழ் என்றே
ஓதி உலகுக் குணர்த்திடவே—தீதின்றி
ஆவன செய்பே ரறிஞர் அண் ணாமலையின்
தேவநேயப் பாவாணர்.

தமிழில் தமிழ்சார்ந்த கன்னடத் தெலுங்கில்
அமைகே ரளந்துளுவில். ஆர்வம்—கமழ்கின்ற
ஆங்கிலத்தில் ஏனை அயல்மொழியில் வல்லுநர் எப்
பாங்கிலுளார் பாவணர் போல்?

வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கிற்
படுமொழிகள் என்ற பலவும்—தடவியே
அந்தமிழே ஆதிஎன் னும்தேவ நேயர்தாம்
எந்தமிழா எல்லார்க்கும் வேந்து.

என் தமிழிற் கொஞ்சம் இருந்த தெலுங் கிற்கொஞ்சம்
பின் ஆங்கிலத்திலே பீஏயும்—நன்குடையேன்
என்று மொழிவார்போல் இல்லைநம் பாவாணர்
பன்மொழிவல் லார் இந்தப் பார்க்கு.

பன்மொழியில் வல்லரென்று பைந்தமிழர் நாவினிலே
இன்னும் சிலபேர் இருக்கின்றார்—அன்னவர்கள்
நாட்டுக்குச் செய்தவென்ன ? நம்தமிழை மாற்றலர்க்குக்
காட்டிக் கொடும் கயவு.

வீணாள்ப டாது தமிழ் மேன்மையினைக் காட்டுவதில்
வாணாளை ஆக்கும்பா வாணர்க்கு—நாணாமல்
அல்லல் விளைக்கும் அயலார்க் கடியார்கள்
இல்லாம லில்லை இவண்,

நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று
கூவும் அதுவுமோர் குற்றமா?—பாவிகளே
தேவநே யர்க்குச் செயுத்தீமை செந்தமிழர்
யாவர்க்கும் செய்வதே யாம்.

திக்கற்ற செந்தமிழ்த்தாய் வெல்கவே வெல்கென்று
மெய்க்குழைக்கும் தொண்டர்மனம் வேகவே வைக்கும்
தடிப்பயல் யாவனே தப்புவான்? அன்னோன்
நடுத்தெருவில் நாறும் பிணம்.

புண்ணானால் நெஞ்சம் தமிழுலகு பொன்றுமென்று
அண்ணா மலைப்பல் கலைக்கழகம்—இந்நாளில்
தேவநே யர்க்குத் திருத்தொண்டு செய்கதென்க
யாவரும் ஏத்தும்படி.

வாழ்ந்தாலே நாம்வாழ்வோம் வாழாளேல் நாம் வாழோம்.
தாழ்ந்த தமிழகத்தில் செந்தமிழ்த்தாய் ஆழ்ந்தாழ்த்து
பாராது பாவாணர்க் கின்னல் புரிவதனால்
வாராது வாழ்விற் புகழ்!

எந்தமிழ் மேலென்று உண்மை எடுத்துரைப்போன்
செந்தமிழன்! செந்நெற் பயன்மழை! — தந்தமிழின்
கீழறுப்போன் கீழோனே! தேவநே யர்வாழ்க!
வாழிய செந்தமிழ் மாண்பு.

## இசையரசு தண்டபாணி தேசிகர்

அண்ணா மலைப்பல் கலைக்கழக அன்னைக்கே
எண்ணில் துறையில் இசைத்துறையே—கண்ணாகும்!
ஆசிரியர், நற்றலைவர் ஆம் தண்ட பாணி எனும்
தேசிகர் தீந்தமிழ் ஊற்று,

இசைத்துறை யார் காப்பார் இவரல்லார் என்றே
இசைத்துறை யார் ஏனியம்ப மாட்டார்?—இசைத் துறையும்
வாய்ப்பாட்டுக் காரரெலாம் தேசிகர் வாய்மலர்ந்தால்
போய்ப்பாட்டுக் கேட்டுவரும் போது.

தமிழர் தமிழால் தமிழ் பாடல் வேறு
தமிழரலார் தாம்பாடல் வேறு—நமக்கான
தேசிகர் பாட்டுச் செவிக்கமுது! மற்றவர்சொல்
ஊசி உறுத்தல் செவிக்கு.

சொல்லின் எழுத்தொன்றும் சோராமல் பண்எழுப்பும்
நல்ல முகம் வாய் நலியாமல்—தொல்லையின்றித்
தோலை யுரித்துச் சுவையளிக்கும் தேசிகரின்
வேலை வியப்பைத் தரும்.

அண்ணா மலையரசர் அன்னை தமிழ்மேன்மை
எண்ணாதார் தாமும் இனிமேலே—பண்ணார்
தமிழிசையே பாடுகென்றார், தேசிகர் தந்த
தமிழிசையால் உள்ளம் தளிர்த்து.

வந்தேறி கட்கும் இசையின் வகைபயிற்றும்
செந்தமிழ்ப் பண்ணின் திறமறிந்த—ஐந்தாறு
பேருக்கும் தேசிகரும் பேராசிரியரெனல்
பாருக் கறைந்த பறை.

கருநாடக இசைக்குத் தென்பாங்கே ஆதி
இரு நாடும் எந்தமிழ் நாடே—தெரிந்துகொள்க
என்ற இசைப்புலவர் தம்மில் நம் தேசிகரும்
வென்ற இசைப்புலவர் வேந்து.

இடரில் தமிழிசைஏ தென்ற புலியைப்
பிடர்சிலிர்த்துப் பாய்ந்து பெரிய—குருடர் கிழித்த
சிங்கங்கள் தம்மில் ஒரு சிங்கம் நம் தேசிகர்
எங்கும் இசைபொழியும் வான்.

படிமிசை ஓர் அண்ணா மலைக்கழக அன்னை
மடிமிசை யேந்தி மகிழும்—நெடிதிசை
சேர்தண்ட பாணிஎனும் தேசிகர் வாழ்க
சீர்பெருக செந்தமிழ்த் தாய்.

அண்ணா மலையரசர் பேர் வாழ்க அன்னாரின்
கண்ணான முத்தையக் காவலனார்—எந்நாளும்
வாழ்கவே! அண்ணா மலைப்பல் கலைக்கழகம்
வாழ்கவே வண்தமிழ் நாடு!

## மருத்துப் புலவர் நாதன்

வாழும்அண் ணாமலைப் பல்கலைக் கழகம்
சூழும் மாணவர் அலுவலர் பிணிகள்
போக்க மருத்துவ மனையும் ஆக்கி
நாதன் எனும் ஒரு நண்மருத் துவரையும்
தேடி அமைத்தது, பிணிப்பேய் திடுக்கிட!

நாதனார் மேனாட்டு மருத்துவ நற்கடல்
துறைகள் பலவும் தோய்ந்த நுண் கலைஞர்.
ஒருபெரும் குடித்தனம் அவருக் குண்டு,
மக்கள் உள்ளனர், உறவினர் வாழ்ந்தனர்,
ஆயினும் அன்னவர் உலகுக்கு வாழ்பவர்.

பெரிய தான மருத்துவ மனையில்
ஒருநல் லழகிய உயர்ந்த மனிதரின்
இருகைநோ யாளிக்கு மருந்துள் அடக்கிய

ஊசிஏற்றிக் கொண்டே இருக்கும்.
இருவிழி எண்ணிலாது வரும்பிணி யாளரை
வருகென மகிழ்ந்து வரவேற்றிருக்கும்.
ஒரு நாள் ஒரு மகள் கண்மருத் துவத்தில்
நாதனார்க் கேஇணை நாதனார் என்றனள்.
அவளை நீயார் என்றேன். அதற்கவள்
நான்தான் உலகம் என்று நவின்றாள்.

அம்மா என்று மகளிர் கைதொட்டு
நன்மருந் தளிக்கும் பொன்னான தந்தையை
நாதனார் உளத்தில் நன்கு காணலாம்.
பச்சை நீர் ஓட்டம் பார்ப்பவர் போல
நச்சினார்க் கினியராய் நோயினை நன் காய்ந்து
இறந்தவன் பிழைத்தான் எனச்செயும் மருத்துவப்
புலவர் மீன்களின் நடுத்துலங்கும் நிலவு!
நாதனார் உறவொடு வாழ்க
ஈதவர் புகழா வானமா எனவே!

## தமிழ்ப் பேராசிரியர்
## சதாசிவப் பண்டாரத்தாரின் புகழ் வாழ்த்து!

சதாசிவப் பண்டாரத்தார்
இதோ இருக்கின்றார் எங்கள் தமிழைக் காக்க
எதோ பார்ப்பான்? எதோ தருமைத்
தம்பிரான்? மீனாக்கி எனத் தமிழ்த்தாய்
அதே நினைப்பாய் அதே மகிழ்வாய்
இருக்கையிலே ஐயையோ இறந்தார் என்றால்
இதே கணத்தில் தமிழ்த் தாயின்
பகைவர் இன்னும் இரண்டு படி ஏறுவாரே!

உருப்படியா வரலாற்றை
உருப்படச் செய்தார்! ஈஸ்ற தமிழ்த்தாய் கோயிற்
றிருப்படியில் தொட்டதாள்
எழுது கோல் கடைசி வரை தீர்ந்த துண்டா?
விருப்படியில் மிகும் ஆற்றல்
போயிற்றே பகைவர் தாம் தரவிருந்த
செருப்படியும் போயிற்றே
சிரிப்பெல்லாம் தமிழ்மணக்கும் திறம் போயிற்றே!

மொண்டாரா மாணவர்கள்
பருகுவதோர் முத்தமிழின் பொய்கை! யாவும்
கொண்டாரும் கொள விரும்பும்
அருங்குணங்கள், தமிழ்ப்பற்றுக் கொண்ட மேலோர்
அண்டாரும் அண்டும் வகை

அன்பினொரு குழந்தை வர இனிது பேசும்
பண்டாரத் தார் போன்றார்
பாண்டில்லை, இன்றில்லை இனியும் அஃதே.

செந்தமிழ்ப் பேராசிரியர்;
வரலாற்றின் ஆய்வாளர்; புலவர் சென்றே
எந்த இடம் கேட்டாலும்
அந்த இடம் இந்த இடம் என்று காட்டும்
முத்து பேர் இலக்கியத்து
முழங்கு கடல் ஒழுக்கத்தின் எடுத்துக் காட்டு!
நத்து தமிழ்ப் புலவர் குழு
மணிவிளக்குச் சதாசிவனார் மாண்டார் என்னே!

மறை மலையைப் பறி கொடுத்தும்
மண வழகைப் பறி கொடுத்தும் வருந்தும் நாளில்
துறைபலவும் ஆய்ந்த தமிழ்ச்
சோமசுந்தரத்தையும் நாம் பறிகொடுத்தோம்!
இறைவர் அவர் இருந்த இடத்து
இவர் இருந்தார் என்று நாம் எண்ணும் போது
சிறியதொரு சாவு வந்து
பெரிய சதா சிவனாரைத் தீர்த்த தேயோ!

கற்றில்லார், ஆங்கிலத்தைக்
கற்றதனால் கற்றாராய்த் தமிழன்னைக்கு
மற்றில்லா இடர் விளைத்தும்
மாற்றலரின் மொழிக் கடிமை யுற்றும் தமிழை
விற்று இலார், தமை வளர்த்தும்
வீறாப்புக் காட்டுகையில் செந்தமிழ் மேற்
பற்றின்றி ஒரு பற்றும்
பற்றாத சதாசிவத்தார் பறந்தா ரேயோ!

பண்பாட்டுத் தமிழர்க்கு
நான் விடுக்கும் விண்ணப்பம்; சதாசிவத்துப்
பண்டாரத் தார்க்கும்; ஒரு
மறைமலைக்கும், மணவழகர் தமக்கும், மக்கள்
கொண்டாடும் சோமசுந்
தர பாரதிக்கும், நம் கொள்கை தோன்றக்,
கண்டார்க ளிக்கும் வகை
உருவக்கல் நாட்டுவது கடமையாகும்.

துய்ப்புக்கும் அரசினரின்
தொடர்புக்கும் தமிழர் நலம் துடைப்பதற்கும்
எய்ப்புக்கும் காத்திருக்கும்
இனத்துக்கும் பாடுபடும் பார்ப்பனர் தம்
பொய்ப்புகழை மெய்ப்புகழ்போல்
ஆக்குகையில் பண்டாரத்தார் போன்றாரின்

மெய்ப் புகழைப் பொய்ப் புகழாய்ப்
பகைவரெலாம் விளம்பும் வகை செய்தல் நன்றா?

சினர்களால் நாட்டுக்குத்
தீமை என எதிர்க்கின்றோம்! நன்றே! ஆனால்
ஊனிறையும் தமிழ்க்குருதி
அற்றார்போல் தமிழ்நலத்தை ஒழித்து நிற்கும்
கூனர்களின் தீமையினை
எதிர்ப்பதுவும் முதல் வேலை என்று கொண்டால்
வான நிகர் அவர் புகழே
வாழ்கென்று வாழ்த்துவது மறக்கொண்ணாதே!

தாயினையும் புணர்ந்தாற்குச்
சிவனடியைச் சிவனே வந்தளித்தான் என்றால்
தூயதெனச் சிவனடியைச்
சொல்லுவதும் சரியில்லை! பண்டாரத்தார்
போயடைந்தார் சிவபெருமான்
திருவடியை என்றுரைத்தார்; பொய்யுரைத்தார்!
தீயர்களில் ஓர் ஆளும்
தீண்டாத புகழுலகில் பண்டாரத்தார்
ஓயாது தமிழ்ப்பொருளே
நமக்கெல்லாம் நினைவூட்டி உள்ளார் அன்றோ?

## பசுமலைத் தமிழன்
## சோமசுந்தர பாரதி

பொய்ப்பாட்டிய லைவையா புரிபோன்றோர்
விரைவாகப் புரியுங்காலை
மெய்ப்பாட்டியலைத் தொல்காப் பியத்தின்நல்
புத்துரையால் மிகவிளக்கிக்
கைகாட்டினான் தென்மொழிக்கும் இனத்திற்கும்
பெருமிதத்தின் கனல்உணர்வில்
நெய்யூட்டினான் சோமசுந் தரன்என்னும்
பைந்தமிழ நேர்மை நெஞ்சன்.

ஆரிய வாயிலிலே வீழ்ந்திருந்த
அந்தமிழை அழியா வண்ணம்
மாரிவாயில் என்றொரு நூல் மதுத்தமிழால்
காளிதாசன் மாழ்கும் வண்ணம்
சீரிய நூல் தந்தானைத் தனித்தமிழின்
செம்மையினைத் திராவிடர்க்கு
வீரியநூல் கூரிய நூல் ஆரியமே
வெட்கமுற விளக்கினானே.

இந்தியநாட் டுரிமைக்கும் விடுதலைக்கும்
ஈடிணையற் றெவர்க்கும் மேலாய்ச்
செந்தமிழன் வ. உ. சி செலுத்தியநற்
கப்பற்குச் செயலாளன் காண்
வெந்தணலாய் வெள்ளைநாய் எதிர்ப்புக்கும்
அஞ்சாத வேங்கை என்றன்
சிந்தைக்கும் செயலுக்கும் தென்பூட்டும்
செம்மாந்த சிங்கம் போன்றோன்

பார்ப்பனரின் புகழ்க்கடிமை ஆகாமல்
பகைக்குன்றைப் பாமலைத் தேர்
ஆர்ப்புறவே ஓட்டினவன் பழந்தமிழை,
பண்பாட்டை அழிப்பதென்றே
வேர்ப்புறத்தில் ஆராய்ச்சி எனும் பேரால்
பொய்யுரைகள் வெளியிட்டாரைப்
போர்க்களத்தில் புறங்காணச் செய்தனன்எம்
அகம்புறத்தைப் புதுக்கினோனே.

எட்டைய புரத்துதித்த முத்தமிழ்ப்
பாரதியார் இருவர் தாமும்—
அட்டைகளாய் இருந்து தமிழ் அழித்தார்க்குச்
சுடுநெருப்பாய் ஆனார். பார்ப்பின்
முட்டையெலாம் மலைமோதி உடைந்தாற்போல்
மூக்குடைந்தார் குழப்பிப் போனார்;
குட்டைமன நரித்தனங்கள் பலிக்கவில்லை
வெற்றியெலாம் கோளரிக்கே.

சொல்வேறு செயல்வேறு படாத்தமிழன்
இந்திப்பேய்த் துறத்தினோன் காண்.
கொல்வேறு; சமயமெனும் குட்டையினில்
வீழாத குணத்தின் ஆறு
வல்லூறு போல்நெஞ்சம். கூர் பார்வை
தன்மானம் வாய்ந்த சான்றோன்
பன்னூறு காலமும் பசுமலை நீர்
பாரெல்லாம் பாய்க வாழ்க!

## திரு. வி. க

60—ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்து

மலிஇரு பத்தைந் தாண்டாய்
வண்டமிழ் நாட்டிலேநம்
கலியாண சுந்தரர்தம்
தொண்டுகள் கண்டுவந்தேன்.
எலி, எனப் புதல்வர், வீட்டில்
இருக்கையில் சுந்தரர் தாம்

புலிஎன வெளியிற் போந்தார்
முதல்முதல் அரசியற்கே!

தமிழறி விலா தார் செய்தித்
தாள்எழு திடுவ தற்கும்,
தமிழுளார் எழுது தற்கும்
வேற்றுமை இருந்த தண்மை
தமிழ்நாடு கண்ட தந்நாள்;
தமிழ்காணார் மீன்கடைக்குள்
தமிழறி கலியாணத்தார்
தமிழேடு முல்லைக் காடே!

துடித்திடு தேச பக்தச்
செய்தித்தாள் தொடக்கப் செய்தார்;
பிடித்தன ஓட்டம் மற்றைப்
பெரும் பெரும் தாள்கள் எல்லாம்
படுத்த நம் செந்தமிழ்த்தாய்
படிசிலம் படிபெயர்த்தே
எடுத்ததை அந்நாள் கண்டேன்;
எழில்கூத்திந் நாள்காண் கின்றேன்.

திரு. வி. கலி யாணசுந் தரனாரின்
செந்தமிழ்க் கட்டுரைகள் என்னும்
அருவிகளில் ஆடியநல் லறிஞர்களும்
அறிவுபெற்றார், இளைய சிட்டுக்
குருவிகளும் தமிழ்க்காதல் தலைக்கேறிக்
குதித்தனவே! வடசொல் லின்கைக்
கருவிகளும் தனித்தமிழின் கனிச்சுவையைக்
கண்டுகளித் தனவே யன்றோ?

உணர்வெழுப்ப மெய்ப்பாடும் உடனிசையும்
மொழிச்சிறப்பும் ஒன்றாய்த் தோன்றிக்
கணகணெனக் கவிதை ஒலி செயும்என்பார்;
அஃதேபோல் மொழிபெயர்ப்பும்;
துணை நூலும் இல்லாமே தனிநூல்கள்
கட்டுரைகள், புணர்ப்பார் தம்மில்
மணலழகர் தமக்குநிகர் மணவழக
ரே என்பேன் இந் நூற்றாண்டில்.

காய்ச்சிவைத்த பசும்பாலில் கழுநீரைக்
கலந்ததுபோல் நன்றில் திதைப்
பாய்ச்சிவைத்துப் பிழைப்பாரும், பாழ்பட்ட
தமிழர்களும் வாழும் நாட்டில்,
பேச்சுவைத்த தோடுகனி பிழிந்து வைத்துச்
சுந்தரவாய் பேச வைத்து
மூச்சுவைத்துத் தமிழர்களை முடுக்கிய இத்
தலைமுறையை வாழ்த்துகின்றேன்.

புதுவையிலே கலியாண சுந்தரனார்
ஆற்றிய சொற்பொழிவில், தூய
மதுவையள்ளி மலர்தேக்கி வண்டுகட்கு
விருந்தாக்கி மயக்குதல்போல்
பொதுவினர்க்குச் சிலப்பதிகாரச் சுவையை
நடையழகைப் புகலும் போதில்
இதுவையா பேச்சென்பேன்; பாரதியார்
கைகொட்டி எழுவார், வீழ்வார்.

இத்துயர்கொள் தமிழ்நாட்டில் எனை மகிழச்
செய்தனவாம் இருப்பவற்றுள்
முத்தமிழ்வாய், உழைப்பாளிக் குழைக்குந்தோள்,
அன்புள்ளம், தமிழ் எழுத்தை
வித்தியுயர் விளைக்கும் விரல், தமிழருக்கோர்
தீமையெனில் விரைந்தோடுங் கால்,
இத்தனைகொள் கலியாண சுந்தரனார்
என்றபொதுச் சொத்தும் ஒன்றே.

கலியாண சுந்தரனார் இருமுப்பா
ணாண்டுவிழாக் கண்டார்; ஆம் ஆம்
மலிஅறுபான் ஆண்டாகி திரும்பத்தன்
மகனுக்கோர் முத்தம் ஈந்தாள்!
பொலிவான நிலாக்காட்டிப் புதுவாழ்வுச்
சோறூட்டிப் பொன்னே என்று
மெலிஇதழால் அவள், திரும்பத் திரும்பநனி
முத்தமிட விரும்புகின்றாள்.

வாழியவே கலியாண சுந்தரனார்
உறவினொடு மிகப்பல்லாண்டே!
சூழியவே தோளுறுதி, பெருஞ்செல்வம்;
கடல்போன்ற நெடும்புகழ்தான்!
வாழியவே இனியதமிழ்! தமிழர்; தமிழ்
நாடு தமிழர்க்கே ஆகி
வாழியவே எல்லாரும் எத்துறையும்
நிகர்எய்தி வையம் நன்றே!

## பெரியார்

அவர்தாம் பெரியார்—பார்
அன்பு மக்கள் கடலின் மீதில்
அறிவுத் தேக்கம் தங்கத்தேரில் (அவர்தாம்)

மக்கள் நெஞ்சில் மலிவுப்பதிப்பு
வஞ்சகர்க்கோ கொடியநெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப் பெரும் படையின் தொகுப்பு! (அவர்தாம்)

தில்லி எலிக்கு வான்பருந்து
தெற்குத் தினவின் படைமருந்து
கல்லாருக்கும் கலைவிருந்து
கற்றவர்க்கும் வண்ணச் சிந்து! (அவர் தாம்)

சுரண்டுகின்ற வடக்கருக்குச்
சூள் அறுக்கும் பனங்கருக்கு!
மருண்டுவாழும் தமிழருக்கு
வாழவைக்கும் அருட்பெருக்கு! (அவர் தாம்)

தொண்டு செய்து பழுத்தபழம்
தூய தாடி மார் பில்விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்! (அவர் தாம்)

தமிழர் தவம்கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும்தலை மேடை
நமக்குத் தாண்டி வந்த வாட்படை
நமைஅவரின் போருக் கொப்படை! ( அவர் தாம்

## ஓமந்தூரார்— காமராசர்

முதல் அமைச்சர் ஓமந்தூரார்க்கு
நம் பெருமான் காந்தியினைக் கொலைபுரிந்த
கோட்சேக்கள் நாடெங்கும் இருக்கின்றார்கள்!
வம்பகன்ற நம்மருமைத் திராவிடத்தும்
மறைந்தே வாழ்கின்றார்கள்; அவர்கள் நோக்கம்
உம்போன்ற திராவிடரின் மேன்மை தன்னை
ஒழிப்பது தான், விழிப்பாக இருத்தல் வேண்டும்!
எம்பெரிய அண்ணலே அஞ்சவேண்டா.
இருக்கின்றோம் உங்களுடன் பிறந்தோம் நாங்கள்!

ஓமந்தூர்த் திராவிடனா முதல் அமைச்சன்
ஒழித்துவிட மாட்டோமா எனநினைக்கும்
தீ மாந்தர் இருக்கின்றார், இது உமக்குத்
தெரியாதா? தெரிந்திருக்கும் மிக நன்றாக!
யாமுமக்குச் சொல்வதுதான் என்னவென்றால்
இப்பெரிய திராவிடத்தில் உம்மைக் கொல்லப்
பாழ் மக்கள் கோட்சேக்கள் தூக்கும் கையைப்
பல்கோடித் திராவிடர்கை முறித்துப் போடும்!

தென்னாப்பிரிக்காவில் அண்ணல் காந்தி
திருத்தொண்டு வெள்ளையர்க்கு வேம்பாயிற்று!
சொன்னாலும் உளம்பதறும் காந்தி தன்னைச்
சுட்டான் ஓர்கோட்சே அக்குண்டு தன்னைத்

தென்னாட்டுத் தமிழச்சி மார்பில் ஏற்றாள்;
செத்தொழிந்தாள்; காந்தியினை உலகுக் கீந்தாள்
இன்னசெயல் அறிவீரோ? கோட்சே கூட்டம்
இவ்விடத்தில் வாலவிழ்த்தால் வேரறப் போம்!

எங்கே என்றால் நடுங்கும் கோட்சே கூட்டம்
இது நமக்குத் தெரிந்தது தான், எனினும் நீங்கள்
உங்களருஞ் செல்வாக்கை இந்த நாட்டின்
உயர்வுக்கும் நன்மைக்கும் செலவழிப்பீர்!
அங்க்ங்கே கோட்சேக்கள்! எதிலும் அன்னார்!
அடக்கிடுக அவர்க்குள்ள அதிகாரத்தை!
கொங்கு மலர்ச் சோலைசேர் திராவிடத்தில்
கோட்சேக்கள் அதிகாரம் குறைதல் வேண்டும்.

கும்பிட்டான் துப்பாக்கிதனை எடுத்தான்
கோட்சேயை அங்கிருந்தோர் மறித்ததுண்டோ?
எம் அண்ணால் ஓமந்தூர் ராமசாமி,
இதை நினைத்தால் சிரிப்பு வரும், அண்ணல் காந்தி
இம் மண்ணில் சாய்ந்ததனை எண்ணும் போதே
இனந்துடிக்கும் இனத்தாரின் மனம்துடிக்கும்!
நம்பிடுக, வடநாட்டான் தன்மை வேறு;
நாம் அவரின் ஒட்டுறவை அறுத்தல் வேண்டும்.

### உயர் நிலைக் காமராசர்

பெருநிலையில் இருக்கின்றீர் காமராசப்
பெருந்தகையீர்! உம் பெருமை அவர்கள் கண்ணில்
கருவேலின் முள் போல உறுத்தும், நீவீர்
கடுகளவும் அஞ்சாதே கோட்சே கூட்டம்
திரை மறைவில் நோக்கத்தை வைத்திருக்கும்
வெளிப்புரத்தில் செல்வாக்கை வளர்க்கு மிந்த
விரிவுதனை நீர் அறிவீர் அஞ்ச வேண்டா

கோட்சேக்கள் செல்வாக்கை வீழ்த்த வேண்டும்
ஏழைக்கும் செல்வனுக்கும் பன்மதத்தார்
எல்லார்க்கும் எதிலும் நலம் புரிய எண்ணி
வாழ்ந்ததுவும் குற்றமெனக் காந்தி அண்ணல்
மார்பு பிளந்தார்; காமராசரே, எம்
தோழரே! திராவிடரே உமது மேன்மை
தொலைப்பதற்கும் வழிபார்க்கும் கோட்சே கூட்டம்!
ஆழ்ந்திதனை எண்ணிடுக கோட்சே கூட்டத்
ததிகாரம் ஒழியு மட்டும் மீட்சி இல்லை!

## சென்னை முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி

சென்னை மாகணத் தின்முத லமைச்சரும்,
தன்னல மில்லாத் தனிப்பெருந் தகையுமாம்
ஓமந் தூர்இ ராம சாமியை

நாம் உளமார நனி வாழ்த்துகின்றோம்.
நல்லது செய்யும் நாட்டம் உடையவர்,
அல்லதை நாட்டினின் றகற்ற நினைப்பவர்
வஞ்சச் செயலால் வாழுமோர் இனத்தவர்
அஞ்சத் தகுமோர் சூழ்நிலை அமைத்தும்.
அறமே மறமென வாயடி அடித்தும்,
இறைமை தன்னை எடுத்தாண்டு கொள்ள
நெருங்குவார் 'அவர்நெருப்' பென்று மீள்வார்.

பொதுமயில் வந்த அதிகா ரத்தைத்
தனிமையில் விற்கும் தக்கைகள் ஒழியத்
தாய் நிலம் தவம் செய் து கிடக்கும் இந்நாள்
பணத்திற் சிறிதும் பற்றிலா ஏழையைத்
தலைமைஅமைச்சராய்ப் பெற்றது தாய்நிலம்
அமைச்ச ரில்லம் ஆக்கித் தரும்படி
நமதி னத்து ராம சாமியை
அழைத்தனர் அரசினர், அன்பினால் ஒப்பினார்

ஓமந்தூர் இராம சாமிபால்
நாமும் இந்த ஞாலமும் வியக்க
இருக்கும் ஒருபெரும் பண்பு தான் என்னெனில்,
முதலமைச் சென்னும் இதுவெனக்கு வேண்டாம்,
என்னுமோர் பற்றிலா த தன்மை — ஆதலால்
அன்றோ வஞ்சகர் அஞ்சுகின் றார்கள்.
ஆதலால் அன்றோ அவரை எதிர்த்தவர்
தூ தூ என்று துப்பப் பட்டார்.

இராம சாமி இந்த நாட்டின்
அமைச்சராய் வந்த அன்று தொடங்கி,
இமைப்பொழுதேனும் சும்மா இராமல்
ஆளத் தெரியுமா அவருக் கென்றும்,
என்ன தெரியும் இராமசாமிக் கென்றும்,
பேசத் தெரியாப் பித்தர் என்றும்,
எழுதத் தெரியா இனத்தவர் என்றும்,
ஆங்கிலம் சிறிதும் அறியார் என்றும்,
தீங்கு செய்யத் தெரிந்தவர் என்றும்,
பிரகா சந்தான் பெரியவர் என்றும்.
தெருவில் நடக்கையில் திண்ணையில் புரள்கையில்
வண் டியிற் செல்கையில் வாயோ யாமல்
குளறு கின்றார் குறுக்கு நூலினர்.
அலறுகின்றார் ஐயம் பெருமாள்கள்

உள்ளதை இல்லதென் றுரைக்க நேர்கையில்
'முதலமைச் சென்னும் இது எனக்கு வேண்டாம்'
என்னுமோர் பற்றிலாத் தன்மை யாளரை
என்ன செய்ய முடியும்? இதுவரை

நாம் உளமார நனி வாழ்த்துகின்றோம்.
நல்லது செய்யும் நாட்டம் உடையவர்,
அல்லதை நாட்டினின் றகற்ற நினைப்பவர்
வஞ்சச் செயலால் வாழுமோர் இனத்தவர்
அஞ்சத் தகுமோர் சூழ்நிலை அமைத்தும்.
அறமே மறமென வாயடி அடித்தும்,
இறைமை தன்னை எடுத்தாண்டு கொள்ள
நெருங்குவார் 'அவர்நெருப்' பென்று மீள்வார்.

பொதுமயில் வந்த அதிகா ரத்தைத்
தனிமையில் விற்கும் தக்கைகள் ஒழியத்
தாய்நிலம் தவம்செய் து கிடக்கும் இந்நாள்
பணத்திற் சிறிதும் பற்றிலா ஏழையைத்
தலைமைஅமைச்சராய்ப் பெற்றது தாய்நிலம்
அமைச்ச ரில்லம் ஆக்கித் தரும்படி
நமதி னத்து ராம சாமியை
அழைத்தனர் அரசினர், அன்பினால் ஒப்பினார்

ஓமந்தூர் இராம சாமிபால்
நாமும் இந்த ஞாலமும் வியக்க
இருக்கும் ஒருபெரும் பண்புதான் என்னெனில்,
முதலமைச் சென்னும் இதுவெனக்கு வேண்டாம்,
என்னுமோர் பற்றிலாத தன்மை—ஆதலால்
அன்றோ வஞ்சகர் அஞ்சுகின் றார்கள்
ஆதலால் அன்றோ அவரை எதிர்த்தவர்
தூ தூ என்று துப்பப் பட்டார்.

இராம சாமி இந்த நாட்டின்
அமைச்சராய் வந்த அன்று தொடங்கி,
இமைப்பொழுதேனும் சும்மா இராமல்
ஆளத் தெரியுமா அவருக் கென்றும்,
என்ன தெரியும் இராமசாமிக் கென்றும்,
பேசத் தெரியாப் பித்தர் என்றும்,
எழுதத் தெரியா இனத்தவர் என்றும்,
ஆங்கிலம் சிறிதும் அறியார் என்றும்,
தீங்கு செய்யத் தெரிந்தவர் என்றும்,
பிரகா சந்தான் பெரியவர் என்றும்.
தெருவில் நடக்கையில் திண்ணையில் புரள்கையில்
வண்டியிற் செல்கையில் வாயோ யாமல்
குளறுகின் றார் குறுக்கு நூலினர்.
அலறுகின்றார் ஐயம் பெருமாள்கள்

உள்ளதை இல்லதென் றுரைக்க நேர்கையில்
'முதலமைச் சென்னும் இது எனக்கு வேண்டாம்'
என்னுமோர் பற்றிலாத் தன்மை யாளரை
என்ன செய்ய முடியும்? இதுவரை

என்ன செய்ய முடிந்த தென்போம்.
எச்சரிக்கை இல்லை—இதுஎன்
விண்ணப்ப மாகும் அண்ண லார்கே!
திராவிடர் கழகச் செம்மை நிலையில்
அரசினர் அழுக்கா றடைதல் உண்டா?
இல்லை. சட்டமும் இருக்கவில்லை.
மக்கள் கருத்தின் வளர்ச்சியைத் தடுப்பது
தக்க தன்று சழக்கரின் முறை அது.
திராவிடர் கழகம் சேர்ந்த சிலரை
ஒரோ விடம்சில உலுத்தர் அடிப்பார்;
அடிப்பது பேடிமை அல்லவா? சட்டம்அத்
தடிப்ப யல்களால் தலைக விழ்வதா?
ஊர்க்காப் பாளர் உள்ளப் போக்கே
சட்டமா? சரிநீதி பட்டுப் போனதா?

பார்ப்பார் தாமும், பார்ப்பார் கையைப்
பார்ப்பார் தாமும் பழியிலாத் திராவிடர்
கழகம் அழியக் கருதுகின் றார்கள்.
திராவிடர் கழகம் இராவிடில் தங்கள்
நெடுநாள் நரிச்செயல் நிலைக்கும் என்கின்றார்;
ஆதலால் தங்கள் அரசியல் செல்வாக்கைத்
திராவிடர்க் கின்னல் செய்வதில் செலவிட்டுக்
கலாம் விளைக்கின் றார். எலாம் இனி அடக்குக!

அடித்தால் அடிக்க அறிவர் திராவிடர்,
அடிக்கும் திறத்தினர் ஆயினும் அடிக்கிலார்.
அரியஉம் ஆட்சியில அமைதி கெடுக்கும்
எண்ணம் திராவிடர்க் கில்லவேயில்லை
கண்கள் திறக்க வேண்டும்.
மண்ணல்லர் திராவிடர் அண்ண லாரே.

## பேரறிஞர் சர். ஏ ராமசாமி

அறிவுத்துறை ஒரு சாரார்க்கே எனில்
அது நாட்டின் அழிவையே உண்டாக்கும்
அன்பரே நேற்றுப் பச்சையப்பன்
அறநிலை நிறுவன நூற்றாண்டு விழாவில்
சர்.ஏ ராம சாமியின் தலைமைச்
சொற்பெருக்கின் நற்பயன் நுகர்ந்திரோ!
அப்பேறிஞர் அறைந்தவை கேளீர்.

எல்லாத் துறையிலும் எல்லா வகையிலும்
தேர்ச்சிபெற்ற இளைஞர் தேவை.
எவர்க்கும் தாங்கள் ஈடானவர் என
ஏற்பட வேண்டும் என்றனர் இளைஞர்.

கற்கும் துறையில் பிற்பட்டதான
ஒருபகுதி. நாட்டில் உண்டு. நமக்கிது
பெருங்குறை. இதனைப் பெயர்த்தெறிந்து
யாவரும் கல்வி ஏற்கும் வண்ணம்
அரசினர் ஆவன செய்ய வேண்டும்
திருநாடு முதுகெலும்பாய்த் திகழ்பெரு மக்கள்,
கற்கும் துறையில் முற்போக்குண்டா?
என்று கேட்கிறேன் இந்த நாட்டில்
முன்னேற்றம், உண்மை முன்னேற்றந்தானா?
இல்லை! கல்வித் துறையை இழந்த வகுப்பினர்
அதனை அடையும் வண்ணம் ஆக்குதல் வேண்டும்;
நிகர் வாய்ப்பே அதன் நேரான, வழியாம்.
அறிவின் நற்றுறை, ஒரு சாரார்க்கே
அமைந்தால் நாட்டுக் கழிவு நேரும்.
வையகம் புகழும் மாப்பேரறிஞர், நாம்
உய்யுமாறே உரைத்த இவற்றை
ஆளவந்தாரும் அன்பு நாட்டாரும்
நாளும் எண்ணுக நாட்டுக செயலிலே!

## நடிகமணி விச்வநாததாசு

கொக்குப் பறக்குதடி பாப்பா என்று
கொடுத்த அடி ஆங்கிலனைத் துடிக்க வைத்து
மக்களையும் எழுப்பிற்று விசுவ நாத
தாசென்னும் பாவாணன் வரைந்த பாட்டு!
வைக்கோலைத் தின்னுகின்ற மாடும் அன்னோன்
வாய்ப்பாட்டில் சொக்கிவிடும்! நடிப்பில் வல்லோன்
தெற்கிலும் ஓர் நடிகமணி இருந்தான் என்று
செப்பிற்று வடநாடும் அந்த நாளில்!

செக்கென்றும் சிவலிங்கம் என்றும் காணாச்
சிறுநாய்போல் ஆங்கிலவர் விசுவ நாத
மக்கள்கவிக் குச்சிறையும் தந்தார்! ஆனால்
மகிழ்ச்சியுடன் வரவேற்றார் அதையும் தாசர்!
கொக்குப் பறக்குதடி என்றார் பின்னும்
கொடிக்கப்பல் தோணுதே எனத் தொடர்ந்தார்,
திக்கற்ற தமிழர்க்கு நாட்டின் அன்பு
சேர்ந்த விசுவநாத தாசெனும் பேர் வாழ்க!

இறந்தநாள் என்னுமொரு பழங்கணக்கில்
எழுந்ததுதான் இந்நாளின் புதிய வாழ்வு!
மறப்பதுப் உண்டோ விசுவ நாதர்பேரை
மறந்திட்டால் கலையுணர்வு வாழ்வதுண்டோ?
சிறந்திருக்க வேண்டுமெனில் அன்னார் கீர்த்தி
செழித்திருக்க வேண்டுமவர் குடும்பம் நன்றே!

அறம் செய்வோம் செய்நன்றி மறக்க மாட்டோம்
ஆண்டுதொரும் நினைவுவிழா நடத்த வேண்டும்.

## வ. வே சு. அய்யர்

கேட்டீரோ தமிழர்களே. நம்மில் மிக்க
சீர்த்தி கொண்ட தமிழன் உயிர் நீத்த செய்தி
ஆட்பணிதல் கடவுள் ஒருவனுக்கே யன்றி
அத்தனைபேரும் சமமே ஆகும் என்னும்
மாட்சிமிகும் எண்ணத்தை நாட்டில் மீண்டும்
மலர்வித்த வீரர்க்குள் வீரன் கண்டீர்!
தாட்டிகஞ்சேர் சுப்ரமண்ய ஐயன் இந்தச்
சகம்நீத்தால் தமிழர்மனம் சகிப்பதுண்டோ?

பருவமயக் கத்தாலே ஆங்கிலத்தில்
பல்கலை வல்லானாகி, இன்னும் கற்கக்
கருதி அந்த ஆங்கிலநாடு ஏக, அங்குக்
கண்ணெதிரே நகைகாட்டி கருத்திற் பாய்ந்த
திருநுதலைச் சுந்தர நற்றெய்வந் தன்னைச்
செங்கைகள் கூப்பித்தன் தெய்வ நாட்டை
ஒருநொடியில் விடுவிப்பேன், ஒன்றும் வேண்டேன்
உறுவனவந் துறுகவெனும் உணர்ச்சியாலே

காய்தன்னை வியந்துகனி வெறுப்போராகும்
கடும்பகையால் கண்டதுயர் கொஞ்சமன்று;
தாய்நாடு திருப்பிவரும்போதில் அந்தச்
சமுத்திரத்துக் கப்பலில் ஓர் சமுத்திரம்போல்
பாயுத்தன் எண்ணங்கள் முன்னும். தோள்கள்
பாரதத்திற் பின்னருமாய்த்தொடரவந்து
காயத்தை நற்பொருளை உயிரை நாட்டின்
சதிக்களித்தோன் கதிநினைத்துக் கலங்காருண்டோ?

நன்னாட்டிற்கு அவன்தொண்டு பெரிது; வேரில்
தண்புனலைப் பாய்ச்சிடுமோர் தியாகம் எண்ணில்
அன்புடையது; இருள்கொண்ட நெஞ்சம் தன்னில்
அணைகடந்த வெள்ளம்போல் தேசபக்தி
நன்றுவளர் விப்பது, நாம் என்செய்வோமால்!
நலம்விளைக்கும் கற்பகத்தைப் புதுநினைப்புக்
குன்றத்தைக் குன்றஞ்சார் குளிர்புனல்தான்
கொண்டதுவோ? பகைவருளம் குளிர்ந்ததேயோ,

## தோழர் வல்லத்தரசு

கேளாயோ 'பார்ப்பனியம்' என்னும் குன்றே!
கீர்த்தியுள்ள புதுக்கோட்டை உன்து கோட்டை!

ஆளுகின்ற மக்களெல்லாம் உனது மக்கள்!
அறமு நீ? சத்தியம் நீ! தெய்விகமு நீ!
தோளுயர்ந்த வீரரெலாம் அறிஞரெலாம்
துணையுனக்காய் மீசைதனை முறுக்குகின்றார்!
நாளன்று! மாசமன்று; வருடமன்று;
நானூறு கோடியுகம் வயதுனக்கு

வானத்தை வில்லாக வளைப்பாய். இங்கே
மணலையெலாம் கயிறாகத் திரிப்பாய்! ஆனால்
மானத்தன், இளவீரன் முத்துசாமி
வலத்தரசன் பகுத்தறிவுக் கச்சை கட்டி
ஆனசுய மரியாதைக் கூர்வாள் தன்னை
அரைக்கசைத்து நின்றதனைக் கண்ட அன்றே
'ஏனப்பா புதுக்கோட்டைப் போர்க் களத்தில்
இறங்கப்பா' என்று நீ சொல்லவில்லை.

மகத்வமுறு பார்ப் பனியமலையே! எங்கள்
வலத்தரசன் எதிர்நின்று வாதம் செய்து
சகத்தினிலே உன் புகழை நிலைநாட் டாமல்
சர்க்காரின் காலடியை நக்கி நக்கிப்
பகுத்தறிவன், இளஞ்சிங்கன், உனைத்தொலைத்துப்
பழி தீர்க்கும், ஆயத்தன் குன்றத்தோளன்,
நகும்படிக்குச் சிறையாக்கு வித்தாய்; பின்பு
நாடு கடத்தச் செய்தாய் நாயே! நாயே!

## தமிழ்நாட்டுத் தவக்கொழுந்தின் மறைவு!

நல்லதொரு நேரத்தில் பொல்லாச் சேதி
நாம்கேட்க வாயிற்றா? தமிழர் தங்கள்
வல்லஒரு படைத்தலைவன் அறத்தின் மிக்கான்
மறத்தமிழன் சர்பன்னீர் செல்வன் இந்நாள்
இல்லை; அவன் மறைந்துவிட்டான் வரவே மாட்டான்
மீளாத விடைபெற்றான் என்கின்றார்கள்.
சொல்வதுண்டோ தமிழர்படும் துன்பந் தன்னைத்
தூர்ப்பதுண்டோ தமிழரது கண்ணீர் ஊற்றை!

நாட்டுரிமை யின்பேரால் தமிழர் தம்மை
நச்சரவுக் கூட்டத்தார் காய்த்துக் கொண்டு
கேட்டையெலாம் தமிழர்க்குத் தந்து தங்கள்
கிளையோடு நலதையெலாம் உறிஞ்சு தற்கே
மாட்டவந்தார் இந்தியினைத் தமிழரெல்லாம்,
மறுததுநின்று போரிட்டார் வெற்றிகண்டார்!
தோட்டமுதம் தமிழர்உணும் நேரம் பன்னீர்
செல்வனையோ பிரிவுற்றுத் திகைக்க வேண்டும்!

தமிழர் நலம் காப்பதற்கு நீதிக்கட்சி
தமிழ்நாட்டில் தோற்றுவித்த அறிஞர்க் குப்பின்
சமர்விளைக்கத் தலைவனின்றி யிருந்த காலை
தனித்துவந்தோல் தமிழர்பிரான் இராம சாமி
''நமரங்காள் அஞ்சாதீர்'' என்றெழுந்தான்!
நன்றெனவே உடனெழுந்தான் பன்னீர் செல்வன்
தமிழர்பிரான் தன்னருமைப் படைத்த லைவன்
தனையிழந்தால் சலியாதோ சயோ உள்ளம்!

ஆரியரின் சூழ்ச்சியினால் கனத்த மண்ணை
ஆழ்உழுது ஒற்றுமையை விதைத்தும் வாழ்வு
நீரளித்தும் தமிழர்நலம் என்னும் வாழை
நிலையுயர்ந்து பூத்துக்காய்த் திருக்கு மட்டும்
சீரியநற் றொண்டு செய்தான் பன்னீர் செல்வன்
செந்தமிழர் தமைஇந்நாள் பிரிந்தாள்-அந்தோ!
கோரியநற் பழம்பழுக்கும் தமிழ்நாட் டார்கள்
கூடிஉண்பார் அவனை எண்ணி இரங்கு வாரே!

இங்கிலாந்தில் இந்தியரின் அமைச்ச ரின்பால்
இருந்துதவக் கோரியதால் பன்னீர் செல்வன்
மங்கியுள்ள தமிழர்நலம் கோரிச் செல்ல
மணங்கொண்டான், தனதுநலம் மறுத்த செம்மல்!
துங்கமுறு தமிழரது செல்வந் தன்னைச்
சுமந்துசென்ற அனிபால்ஆ காய ஊர்தி
இங்குள்ள படைச்சிறியர் களிப்புக் கொள்ள
இட்டதுவோ நடுக்கடலில் துயர்தான் என்னே!

''தமிழ்நாடு தமிழர்க்குத் தமிழர் நாட்டில்
சனியாக வந்துள்ள ஆரி யர்கள்
தமரல்லா நம்பகைவர் அந்நாள் தொட்டே!
நமதுகலை வாழ்க்கைமுறை வேறே உண்டு
நமையேநாம் நம்பிடுவோம்! பிறரின் சூழ்ச்சி
நஞ்சுதனை விலக்கிடுவோம்!' என்று சொன்னும்
அமுதான மொழிகளெல்லாம் பன்னீர் செல்வன்
அழகியவாய் இருந்துவரக் கேட்ப துண்டே!

தஞ்சைபெற்ற தமிழ்நாட்டுத் தவக்கொ ழுந்து
தமிழ்மொழியின் படையாட்சி யுடைய நம்பி
நெஞ்சையள்ளும் பெருந்தன்மைச் செயல்படைத்தோன்
நிறைசெல்வன் குறைவற்ற பன்னீர் செல்வன்
பஞ்சையுளத் தானல்லன்; கொள்கைக் காகப்
பரிந்துபோ ராடும்அண்ணல் மறைந்தான் இங்கே!
மிஞ்சுமவன் பெரியபுகழ் மறைவ தில்லை
மிகுதமிழர் அவன்நன்றி மறப்ப துண்டோ

## தமிழுக்கு உயிர்தந்த நடராசன்

இந்தி எதிர்ப்புப் போரில் சிறைக்குச் சென்றான்.
இளங்காளை நடராசன்; சென்னை வாசி;
அந்தமுறும் இலக்குமணன் அம்மாக் கண்ணாம்
அருந்தமிழர் பெற்றெடுத்த மருந்து போல்வான்
செந்தமிழிற் பற்றுடையான்; உத்தியோகச்
சிறு வாழ்வில் வெறுப்புடையான்; கைத்தொழில் மேல்
சிந்தை வைத்தான் பயின்றுவந்தான் திறமை யுள்ளான்;

தமிழ் நாட்டில் இந்தியினைக் கட்டா யத்தால்
சாரவிட்டால் தமிழ்சாகும் எனநினைத்தான்
அழுதொழுத்த தன்தமிழின் நிலைக்கு நொந்தான்
அண்ணை அயற் பெரியார்பால் தனக்கேற் பட்ட
சமுசயத்தைத் தெரிவித்தான். உணவு நீத்தான்
சதாகாலும் இதே நினைவாய் இருந்து வந்தான்
தமிழகத்தார் எல்லார்க்கும் உணர்வு காட்டித்
தன் உருவம் காட்டிவிட்ட தமிழ்ப்பி ராட்டி

நடராசன் எதிரேயும் வந்து நின்று
நானில்லா விடில்நீயும் இல்லை என்று
படபடத்த இதழாலும் துயர்க்கண்ணாலும்,
பகர்ந்து சென்றாள். வாழ்கதமிழ் வாழ்க வாழ்க
இடரான இந்திமொழி வீழ்க வீழ்க
என்றுரைத்தான் தமிழரிடம் தமிழ்நாட்டின் கண்!
அடாதசெயல் இதுஎன்றார் இந்திச் சர்க்கார்
அழகியோன் தான்தன்னைச் சிறையிற் கண்டான்.

நெஞ்சத்தில் வீற்றிருந்த தமிழ்த்தா யோடு
நெடுஞ்சிறையில் நடராசன் இருந்தான். அன்னோன்
கொஞ்சுமொழி தனைநினைத்துப் பெற்றோர் உற்றோர்,
கொடுஞ்சிறைக்கு வெளியினிலே இருந்தார், மற்ற
வஞ்சமிலாத் தமிழரெலாம் நடரா சன்பேர்
வாழ்த்திக் கொண்டிருந்தார்கள் சிலநாளின் பின்
வெஞ்சுரந்தான் கண்டதுவாம், அதுநாள் தோறும்
மேலோங்கலா யிற்றாம் மெலிவுற் றானாம்.

சாக்காட்டின் ஓட்டினிலே தவிக்கும் போது,
தமிழ்நாட்டைத், தமிழர்களைப் பெற்றோர் தம்மைப்
பார்க்குமோர் ஆசைவந்து படுத்தும் போது
பழியேற்க அஞ்சாத சிறைத் தலைவர்
ஆக்கினைஒன் றிட்டாராம்! நடராசாநீ
அரசினரை மன்னிப்பு கேட்டுக் கொண்டால்
பாக்கியனாய் விடுதலையைப் பெறுவாய் என்றார்.
பைந்தமிழன் தன்நிலையை எண்ண லானான்.

மன்னிப்புக் கேட்டிடுவாய்; தமிழர்க் குள்ள

மானத்தை இழந்திடுவாம் என்று கூறிச்
சின்னபுத்தி அதிகாரி கேட்டு நிற்கச்.
செந்தமிழ்த்தாய் உன் அன்பின் அடையாளத்தை
இந்நிலையிற் காட்டுகநீ மைந்தா, மைந்தா
என்றேதன் தாமரைக்கை ஏந்தி நின்றாள்.
மன்னாதி மன்னர்களின் வழியில் வந்த
மாத்தமிழர் பழம்பெருமை பறிபோகாமே
காக்கஎன்று நின்றிருந்தார் கூட்டமாகக்
கண்ணாலும், சிரிப்பாலும் தனது காதற்
போக்குணர்த்தி வந்தஓர் இளைய நங்கை
பூமானை, அன்புதர வேண்டி நின்றாள்.
வாய்க்கும் இவை அத்தனையும் நடராசன் தன்
மனோலோக நடைமுறையாம். என்ன செய்வான்.
ஆர்க்கும் முரசம்போல் 'மன்னிப்புக் கேளேன்'
அருஞ்சிறையில் சாவதற்கும் அஞ்சேன் என்றான்.

தனைத்தந்தான் எனக்கென்றாள் செந்தமிழ்த்தாய்
தகதகெனக் களியாட்டம் ஆடா நின்றாள்!
தனக்கென்று வாழாத தமிழா என்று
தமிழரெலாம் அவன்பேரைப் பாடா நின்றார்!
தனிப்புகழ்சேர் நடராசன் தன்னைப் பெற்றோர்
தமிழுக்குப் பெற்றோம்என் றகமகிழ்ந்தார்!
நனித்த நறுங்காதலிதான் தேம்பி நின்றாள்!
தமிழ் வீரன் நடராசன் இறந்து போனான்.

அன்னவனின் புகழ்இந்தத் தமிழ்நாட்டின் கண்
ஆர்ந்ததற்குக் காரணத்தை அறிவிக் கின்றேன்
சின்னதொரு கல்வியினால் தருக்குக் கொண்டு
தீமையெலாம் மக்களுக்குச் செய்து கொண்டு
தன்னலத்தை எண்ணி எண்ணித் தமிழர் நாட்டைத்
தரைமட்ட மாக்குகின்றான் அவர்போலின்றி
இன் தமிழிற் கல்விகற்றான் நடரா சச்சேய்
எழில்பெற்றான் புகழ்பெற்றான் எல்லாம் பெற்றான்.

## சீவானந்தம் புகழுடம்பிற்கு புகழ்மாலை

சீவாநந் தத்தின்
தமிழ்த் தொண்டு செப்புகிற
'நா' ஆனந் தத்தை
நணுகுமன்றோ-பாவாணர்
நல்லாரைப் பாடியன்றோ
நல்லின்பத்தைப் பெற்றார்
பொல்லாரைப் பாடுவரோ போய்?

சீவா வினவறிந்த
நாள்முதல் செந்தமிழ்ச் சீர்
காவாத நேரத்தைக்
கண்டவர் யார்? நாவாரச்
சொற்பெருக் காற்றாத்
துறையுண்டா? யார்க்குமவர்
பொற்பெருகச் சீறும் புலி.

பாட்டெழுதக் கேட்டிடுவார்
பன்னாளும் ஓர் நாள், நீர்
பாட்டெழுதும், என்று
பகர்ந்திட்டேன்—கேட்ட அவர்
ஏழை நிலை எண்ணி
எழுதிய பாட் டொவ்வொன்றும்
வாழவகை செய்யும் மருந்து.

இறைக்கஞ்சி ஏங்கும்
தலைவர்போல் அன்றிச்
சிறைக்கஞ்சா சிங்கத்தைச்
சாவு மறைத்ததனை
எண்ணினால் நெஞ்சம்
இறங்கும், தமிழின்நிலை
எண்ணினால் கண்ணீர் வரும்!

எப்போது பெண்கொண்டார்?
இல்லத்தில் மக்கள் தமை
எப்போது கையில்
எடுத்தணைத்தார்?—முப்போதும்
மாசுடையும் மாற்றாத
சீவாவுக் கூர்ஊராய்ப்
பேசுவது தானே பெரிது.

தாமரைக்கோர் ஆசிரியர்
தாய்மொழிக்கோர் ஆய்வாளர்
ஊமரையும் பேசவைக்கும்
உண்மையிதழ்த் தாமரையோ
கல்விப் பசிக்கு நல்
கட்டமுது! கற்றாரை
வெல்விக்கும் வெற்றி முரசு.

நாட்டுக்குப் பேசித்தன்
நாட்டுக் கெழுதி உயிர்
நாட்டுக்கே நல்கிய
சீவாவை—நாட்டில்
இருக்கும் படிசெய்வோம்!
கல் நாட்டிச் சீர்த்தி
பெருக்கும் படிசெய்வோம் நாம்!

இருந்தும் வரைந்தார்
    இறந்தும் வரையத்
திருந்து புலவரையும்
    செய்தார்!—விருந்தினரைத்
தாமரை என்றும்
    தழுவவைத்தார் ஆதலினால்
நாமவரை நாளும் மறவோம்.

தாங்கொண்ட கொள்கை
    தழைக்கப் பெரிதுழைப்பார்
தீங்குவரக் கண்டும்
    சிரித்திடுவார்—யாங்காணோம்
துன்பச் சுமைதாங்கி!
    சீவானந்தம் போன்ற
அன்பச் சுமைதாங்கும் ஆள்,

சீவா புகழ்காப்போம்!
    செம்மல் மனைமக்கள்
மூவா மகிழ்ச்சியினில்
    மூழ்க வைப்போம்—சீவா
தொடங்கிய வற்றைத்
    தொடர்ந்து முடிப்போம்
நடுங்கோம் தமிழ்மீட்க நாம்

## எஸ். இராமநாதன்

### (உரைமுழக்கம்)

நெல்வேலிச் ஜில்லாவில் ஆண்டு தோறும்
    நிகழுசுய மரியாதைப் பெரிய கூட்டம்
சொல்வாய்ந்த தூத்துக்கு டிக்கண் இன்று
    தொடங்கினார் என்பதையும் அவ்வி டத்தில்
வல்லாளர், நல்லறிஞர், செல்வர் யாரும்
    வந்திருந்தார் என்பதையும் அக்கூட்டத்தில்
எல்லாரும் எஸ்ராம நாதன் தன்னை
    எழிற்றலைவ னாய்க்கொண்டார் இதையும்கூறி,

சிறப்பாய்இந் நாட்டினுக்கும் பொதுவாய் மற்றத்
    தேசத்து மக்களுக்கும் ராம நாதன்
அறப்பாதை இதுவென்றே கூறிவிட்டார்
    அம்மொழியை நன்றாக எடுத்துக் காட்டி,
''நிறப்பேச்சை மதப்பேச்சைச் சாதிப் பேச்சை
    நிறுத்துங்கள் வாழுங்கள் என்றார்'' அந்தத்
திறப்பேச்சைக் குறிப்பாகச் சொல்லிக் காட்டிச்
    செகமதிர வீராநீ முரசறைவாய்.

மதங்கள் எனும் படுகுழிகட் கப்பா லன்றோ
 மக்களது முன்னேற்றம் உண்டென்கின்றார்
இதங்கனிந்த நெஞ்சத்தால் ராம நாதன்
 இசைக்கின்றார் ஓகோகோ வீரா! இந்நாள்
மதங்கொண்ட யானைமேல் முரசம் ஏற்றி
 வையத்தார் எழுச்சியுறக் குணிலை ஓச்சிச்
சதங்கூறி முழக்கஞ்செய்! மக்கள் யாரும்
 சமம்என்று முழக்கஞ்செய் முழுக்கஞ் செய்நீ

கொடுமையெலாம் உறைவிடத்தைக் கோயி லென்றும்
 கொடுமைகளின் பொக்கிஷத்தை நூற்களென்றும்
மடுமொழிகள் பேசுவதும் தீண்டோ மென்றும்
 மக்களை விலக்குலதும் அறிவுக் கொவ்வா
நெடுமூடப் பழக்க வழக்கங்கள் கொண்டு
 நிலஞ்சிரிக்க வாழ்வதுண்டோ என்று சொன்னார்
விடுதலைகொள் நெஞ்சத்தால் இராம நாதன்
 விளம்பியதை விளம்பிமுர சறைவாய் நன்றே.

விடுதலைப்பெண் மக்களினை நமதுநாட்டில்
 வெற்றடிமைப் பெண்மக்க ளாக்கி விட்டார்!
கெடுதலையை நீக்குங்கள்! வறுமைப் பேயைக்
 கிழித்துப்போ டுங்கள்! விஞ் ஞானத் தேர்ச்சி
அடையுங்கள் எத்தொழிற்கும் ஆலைக் கூட்டம்
 அமையுங்கள் அழையுங்கள் புதிய வாழ்வைக்
கொடையன்பர் இராமநா தன்சொல் வாழ்த்திக்
 கொட்டடா முரசத்தை! அன்னார் வாழி!

## இ. மு. சுப்பிரமணியம்

### (சந்திரசேகரப் பாவலர்)

நேர்மை நீதி அஞ்சாமை
 நிறைந்த பன்னூல் தேர்புலமை
சீர்மை கனிய நூலறிவு
 சித்தாந்தத்தில் பேரறிவுக்
கூர்மை, ஆர்யக் கூட்டத்தைக்
 குப்பைக் கூளப் புராணத்தைத்
தீர்ப் புரைக்கும் திறனாய்வால்
 தெளியச் செய்தான் தமிழ்நிலமே!

செந்தமிழுக்குத் தீதென்றால்
 சிறுகுறும்பு பார்ப்பனர்கள்
முந்துவார்கள் அவர்கள் தம்
 மூக்கறுக்கும்படிச் செய்யும்

தந்தை பெரியார்த் கொரு துணைவன்
    தமிழன் குடியரசேடுதனில்
சந்திர சேகரப் பாவலனாய்
    சாய்த்தான் பார்ப்பார் கொட்டத்தை.

இராமா யணத்தின் இழிவெல்லாம்
    எத்துப் புலவர் கூற்றெல்லாம்
பராவி வணங்கும் வால்மீகி
    பல்லைப் பிடித்துக் காட்டியவன்
வராத தீமை வந்ததெலாம்
    வழிபட்டேற்ற கம்பனவன்
திராவிடத்தில் செயும் தீமை
    தெரியச் செய்தான் இ. மு. சு.

பாரதத்தின் பார்ப்பனரின்
    பழக்க வழக்க ஒழுக்கமன்றி
வீரம் நீதி ஒன்றுமிலை
    வெட்கம் கெட்ட குடும்பத்தின்
சோரம் போன கதையென்று
    தோலுரித்துக் காட்டியதார்?
சாரம் மிகுந்த எங்களுயர்
    சந்திர சேகரப் பாவலனே!

## மானவீரன் வ. உ. சிதம்பரன்

வெள்ளையன் கப்பலாலே
விரிந்தஇந் நாட்டின் செல்வம்
கொள்ளைகொண் டோடல் கண்டு
கொதிப்புற்ற சிதரம்பரன் பேர்
பிள்ளைதான் பேருக்கத்தால்
பிழைக்கவந் தடிமை கொண்ட
நொள்ளையர் மாயச் செய்தான்
நோன்மைசேர் கப்பல் விட்டான்!

கடல்பிறக் கோட்டிச் சென்ற
கால்வழி வந்த எங்கள்
அடல்மிகு விடுதலைப் போர்
அரிமாக்கள் ஆயிரத்தை
தடந்தோளில் நெஞ்சில் சேர்த்த
தமிழனை நினைக்கும் வெள்ளைக்
குடலெலாம் கலங்கும் தூத்துக்
குடியதன் குடிமை காத்தான்.

இந்தியத் தலைவர் எல்லாம்
இந்திய வீரர் எல்லாம்

செந்தமிழ்ச் சிதம்பரத்தின்
செந்தணல் சிந்தனைக்கே
முந்தித்தம் செவி கொடுப்பார்
முடிவினை எடுப்பார் வெல்வார்.
அந்தமிழ் பாரதிக்கும்
அவனன்றோ அரிய அம்மான்.

பகைவனைப் பரங்கிப் பேயைப்
பாரத நாட்டிருந்து
தகைப்பதும் உரிமை நாட்டில்
தலைநிமிர்ந் துயர்து வாழ்தல்
வகையென வேங்கை யாகி
வடக்கொடு தெற் கனைனதும்
தொகை தொகை மறவர் கூட்டம்
தொகுத்தனன் வெடி மருந்தாய்!

விடுதலை மறவனுக்கு
வெள்ளையர் சுரண்டல் கூட்டம்
கெடுதலை கோடி தந்தார்
உலகினைக் கெடுக்க வந்தார்
படுகொலை வழக்கு நூறு
பாய்ச்சினர்; சிறைக் கோட்டத்துள்
கொடுதலை என்றார், வீரச்
சிறுத்தையா கோழை யாகும்?

கல்லுடை என்றார் வெள்ளைக்
காரரின் அதிகாரத்தின்
பல்லுடைப் பதனைப் போல
பாறைகள் உடைத்தார், நெஞ்சின்
மல்லுடைத் திட்டதில்லை
மறத்தமிழ் நெஞ்சம் இன்பச்
சொல்லுடை படாத பாக்கள்
சொல்லிடும் துயர் துடைக்கும்!

திக்கெலாம் திருட வந்த
சிவந்ததோல் பரங்கியர்கள்
வெட்கிட புரட்சித் தீயின்
வெடிகளாய்ச்சி தம்பரத்தின்
சுக்கு நூறாக்கும் தோழர்
தொல்லைகண் டிடிந்த போது
செக்கினை இழுக்கச் செய்தார்
சிதம்பரப் பெரியோன் தன்னை.

எண்ணெயைப் பிழிவதைப் போல்
ஏ வெள்ளைக் கார ரெனும்
மண்டையைப் பிழிவோம் என்று
மனத்தினில் எண்ணி எண்ணி

கண்ணீரைப் பொழிந் திடாமல்
கடுந்துயர் உள்ளம் கொள்ளும்;
திண்ணையில் பார்ப்ப னர்கள்
தெருச்சோறுண் டுவகை பூப்பார்!

மூவாயுள் கடுஞ் சிறைக்குள்
மூடினார் சிதம்பரத்தைச்
சாவாயுள் விழுங்குதற்கும்
தவித்தது தமிழ் மானத்தை!
நோய்வாயில் புகுத்து தற்கும்
தோற்றது சிறை நொடிப்பு.
மாவாயில் திறந்த தோர் நாள்
மானவேள் வெளியில் வந்தான்.

உடல் பொருள் ஆவியெல்லாம்
உற்றநாட்டு டுரிமைப் போர்க்கு
கெடல்இல்லை என இழந்தோன்
கீழ்ப்பட்ட சிறையிருந்து
மடங்கலாய் வந்தான்; ஆனால்
ஆரிய மடியில் வாழ்ந்தோர்
அட்டவோ சிதம்பரத்தை
அணுகிடக் கூசினார்கள்,

நன்றிகெட் டுயிர் வாழ்கின்ற
காங்கிரசியக்கத் தார்கள்
பன்றிக்கும் கீழ்ப் பட்டோரே
பரங்கியன் சுரண்டற்குப் பின்
வென்றி என்றுவப்ப தெல்லாம்
வெற்றுவேட்டு ரிமை யாகும்
என்றிவர் வாழ்வார்? இல்லை
இடியுண்ட மரம்போல் வீழ்வார்

## பவானந்தம் பிள்ளை

ஆங்கில மொழியின் அறிவிருந்தாலே
தாங்கள் உயர்ந்தவர் தமிழுக்குத் தாம்செயும்
தொண்டு பெரிதென்று சொல்விப் பார்ப்பன
நண்டுகள் வளையிலே நாடகம் நடத்தும்
பண்பிலாச் செயலில் பலர் இங்கிருக்கையில்
கண் இழக்காத கற்றவர் சான்றோர்
சிவானந்தத்திலே சிந்தை செலுத்தா
பவானந்தத்தின் பணியை எண்ணினால்
உண்மை அறிமுனின் உழைப்பை எழுதிடும்
வண்மை தமிழுக்கு வரவில்லை என்பேன்,

நெறியியலில் திறனாயும்
நெஞ்சுடையான் நிறைநூற்கள்
நினைந்து கற்பான்.
வெறியியலில் நிற்காத
வீரனவன் வீழ்தவனே
விரி தமிழ்க்கே.

கட்டத்தின் ஒப்பந்தம்
ஒவ்வொன்றும் கண்டுமுதல்
காண்பதெல்லாம்
கொட்டிடுவான் சரந்தை தமிழ்ச்
சங்கத்தின் கடைக்காலாய்,
கலைமலிந்த
கட்டடமும் அவனாவான்
தமிழ்ப்பொழிவின் கடிமணமும்
கவின் வனப்பும்
உட்சுவையும் அவனாவான்
உணர்வெல்லாம் உணர்ச்சியெலாம்
உயிர்த்தமிழ்தான்.

இலக்கியமும் இலக்கணமும்
கல்வெட்டாய் செப்பேடாய்
இருந்தினிக்கும்.
வலக்கண்ணாய் இடக்கண்ணாய்
வாங்குவளி நுரையீரல்
வகைபடல் போல்
துலக்கமுறும் எந்நாளும்
துல்லியமாய் மிகத்தெளிவாய்த்
துய்த்தவற்றைச்
சொலத்தெரிந்த மிகச்சிறந்த
காவிரிபோல் தலைச்சுரப்பு
சொரியுங்குன்றம்.

எள்ளிநகை யாடுவதில்,
இலக்கணத்தில் சொக்கட்டான்
இடுவான், வெல்வான்,
வெள்ளிமின்னல் போல்சிரிக்க
விளையாட்டாய்த் தமிழ்கற்கும்
வேலையற்றோர்

கொள்ளிவைக்கும் கோடரிக்காம்
பானசில வழக்கறிஞர்
கூட்டந் தன்னைப்
பள்ளியகரப் பழங்கதைபோல்
பலகூறி பழமைப்பித்
தறுப்பான் பாய்ந்தே!

மொழிபெயர்ப்பில் ஈடில்லான்
மேனாட்டு மொழிப்புலவர்
முதுநூல் கண்டு
தொழிலாகக் கொள்ளாமல்
தொண்டாக்கும் பேருள்ளம்
தூய உள்ளம்.
விழியாவான் எந்தமிழுக்கு,
சங்கநூற் சொல்லடைவு
விரிவனைத்தும்

பொழிகின்ற குற்றாலத்
தைந்தருவி பெரும்புலமை
பொருநை ஆறே!
எத்தனை நூல் வாங்கிடுவான்
எத்துணை நூல் கற்றிடுவான்

அத்தனையும் தன்னலத்
தாழியின் முத்தல்ல!
எண்டிசைக்கும் ஏருழவன்
ஈந்த உணவாகும்
ஒண்டமிழ்க் கான உரம்.

## யாழ் நூல் தந்த விபுலானந்தன்

எந்தமிழால் வையம்
இரும்பூது கொண்டிடுமோ
அத்தமிழால் வாழ்வை
அகப்படுத்தி முத்தமிழால்
தொன்மொழிக்குத் தோலா
துழைத்துயர்ந்தோன் சொல்லருமை
தென்மொழிக்கு யாழிசைத் தோன்.

அறிவறிந்த நாள்முதலாய்
அந்தமிழும் தொண்டும்
நெறியறிந்த நீர்மையன்;
நேர்மைக் குறியறிந்து
முத்தமிழ்க்குப் பண்ணானான்
முச்சங்க யாழ்கண்டான்
எத்தமிழுக்கும் ஈந்தான் இலக்கு!

பாழ்நூலே செய்து
பதிப்பித்துப் பைந்தமிழைக்
கூழ்நூலே என்று
கொடுக்கையில் யாழ்நூலை
இந்தா எனக்கொடுத்தான்
எண்ணரிய ஆய்வின்பின்
சிந்தா மணிச்சிலம்பில் தேர்ந்து.

பெருங்கதையால் வாழ்வைப்
    பெருக்காமல், வையப்
பெருந்தகைக்கே வாழ்வை
    துறந்த அருந்தகையன்
தாயைத் துறந்தாலும்
    தண்டமிழைத் தான் துறவா
தூயவனை வாழ்த்தல்என் தொண்டு.

சங்க நூல் விற்பனையில்
    சாரும் மடச்சோற்றில்
தங்க நூற் காகத்
    தனையடகாய் எங்குமே
வைக்காமல் அண்ணா
    மலைப்பல் கலைக்கழகம்
கைக்கொடுத்தான் யாழ் நூலைக் கொண்டு.

எங்கே இசை நுணுக்கம்?
    எங்கே பெருநாரை?
எங்கேநம் சிற்றிசை,
    பேரிசை, பொங்கிசை நூல்?
எங்கே எனக்கேட்டார்க்
    கெல்லாம் இசையாழ்நூல்
இங்கே எனவீந்தான் ஏந்து.

ஏழிசையும் செந்தமிழே
    ஏமுற வையத்து
வாழிசை எல்லாம்
    வழங்குதமிழ்ச் சூழிசையே
காணுங்கள் என்றான்
    கலைவிபு லானந்தன்
பூணுங்கள் என்றான் புரிந்து.

சீர்செழித்த செங்கோட்டு
    யாழுடன் செந்தமிழ்
பேர்செழித்த பேரியாழ்
    சீறியாழ் வியாழில் நல்
எத்தனை உண்டோ
    இசைக்கருவி யாழ்வகைகள்
அத்தனையும் காட்டினான் ஆழ்ந்து

ஆங்கிலமும் ஆரியமும்
    நன்கே அறிந்திருந்தும்
பாங்கிருக்கும் பைந்தமிழ்க்கே
    தன்வாழ்வை ஓங்கிருக்கச்
செய்விபு லானந்த
    செம்மைத் துறவியினைக்
கைகுவித்து வாழ்த்தும்என் வாய்.

செம்மை நலங்கனிந்த
செய்யுளைத் தீட்டுங்கை;
மும்மைத் தமிழை
முழக்கும்வாய்; அம்மம்ம!
தெற்கே இலங்கைமுதல்
செல்லும் இமயவ்வரை
பற்றே படரும் தமிழ்.

## அண்ணல்தங்கோ

நீண்ட நெடுந்தோற்றம்
நேர்மை தவறாதான்
பாண்டிய நாட்டுப்
பழந்தமிழே யாண்டும்
மொழிவான் மொழிப்போரில்
மூத்தோன் பகைக்குப்
பொழிவான் இடியின் புயல்.

தமிழர் திருநாளைத்
தன்பொருள் ஈந்தே
தமிழறிஞர் தம்மை
அழைத்துத் தமிழுணர்வை
ஊட்டுவான் அண்ணல்தங்கோ
ஆரியரை ஊரறிய
ஓட்டுவான் ஓடுஓடென்று.

செந்நீரை இந்திய
நாட்டிற்குச் சிந்தினான்
கண்ணீரைத் தந்ததிந்த
காங்கிரசு, வெந்நீரைச்
செந்தமிழ் வேருக்குச்
பாய்ச்சியதும், போராட
அந்தமிழ்க் கானான் அரண்.

தமிழ்நிலத்தை மீட்கத்
தமிழ்நில ஏட்டைத்
தமிழ்நலத்தோ டீந்தான்
தமிழர், தமிழ்மொழி
தாய்நாட்டுக் கென்றே
தனையீந்தான்; ஈந்தானே
நோய்நாட்டுக் கேற்ற மருந்து!

## உடையார்பாளையம் வேலாயுதம்

உடையார் பாளைய வேலா யுதத்தை
மடையர்கள் மரத்தில் கொன்று தூக்கினராம்!
கொடுமைகள் செய்யும் கூட்டமே ஆரிய
எடுபிடிகளா நீர்? எச்சிற்பொறிக்கிகள்.
பெரியார் இயக்கச் சுயமரியாதை
புரியா திருக்கும் போக்கிலிகளே நீர்
யாரைக் கொன்றீர், யாரைத் தூக்கினீர்?
வேரையும் விழுதையும் வெட்டிச் சாய்த்தால்.
திராவிட ஆலே செத்து விடாதா?

தங்களைத் தாங்களே தற்கொலைக் காக்கும்
தகாத செயலைத் தமிழரே செய்வதா?

ஆரிய மதத்தின் அடிமை ஆனீர்
ஆரியச் சாதியால் அவதிப் பட்டீர்
ஆரியக் கொடுமையால் அல்லல்கள் கொண்டீர்
ஆரியச் சுரண்டலுக் கழிந்து கெட்டீர்
இன்றுநீர் கோடரிக் காம்பாய் இயங்கினீர்
பழியும் இழிவும் பச்சைத் தமிழரே
அழிவுக் குழியில் ஒழிப்ப தறிகிலீர்.

இரக்கப் படுவதா எரிச்சல் கொள்வதா?
உரத்த சிந்தனை கொள்ளடா திராவிடா!
நன்று சுய மரியாதை என்று நவின்று
வென்றிடும் உலகில் வீரியம் மிக்க
பகுத்தறிவாளராய்ப் பண்பாடடைந்திட
விழிப்படை யீரோ, வெல்லும் திராவிட

மொழிப்போர் இனப்போர் மூடநம்பிக்கையின்
அழிவுப் போரினில் அனைவருக் காகத்
தொண்டு செய்த தோழனைத் தூக்கில்
கொண்டு சேர்த்தீர்; கொன்றுங்களையே
ஆரிய நரிக்கே அரும்பசி தீர்த்தீர்.

ஓர்நாள் உணர்வீர்; வெட்கம் உங்களைப்
பிணம்தின்னிக் கழுகாய்ப் பிடுங்கித் தின்னும்,
அன்றுநீர் ஆரிய அடிமை விலங்கினைக்
கொன்றுபோட்டுக் கொதிப்புற் றெழுவீர்.
உடையார் பாளைய வேலாயுதத்தின்
படையினிலிருந்து. பெரியார்
இடுங்கட்டளைக்கே முடுகுவீர் அறிவனே:

## வ சுப்பையயன்

திருநெல்வே லிச்சைவ சித்தாந்த
நூற் பதிப்புக் கழகம் போலும்
ஒரு நல்ல தமிழ் வளர்க்கும் நிறுவனமும்,
கண்டதில்லை உலகில்! அந்த
உரைமல்கு நிறுவனமும், முப்போதும்
தமிழுக்கே உழைக்கத்தக்க
பெருநல்லான் தமிழ்ப்புதல்வன் சுப்பையன்
போற்பிறரைப் பெற்ற தில்லை.

நூலெல்லாம் விளையுமங்கே நூறாயி
ரக்கணக்கில்! நூல் ஒவ் வொன்றின்
மேலெல்லாம் அழகுசெயும் சுப்பையன்
மிகுதிறமை! அதுவுமின்றிக்
காலெல்லாம் சிலம்பொலிக்கத் தமிழரசி
உலகரங்கு காணும் வண்ணம்
தோலெல்லாம் சுளைப்பயன் கொள் புதுப்புதுநூல்
தோற்றுவிப்பான் அந்த மேலோன்.

## ந. சி, கந்தையா

தென்னிலம் இதனின் தொன்மை என்ன?
செந்தமிழ் தோன்றிய காலம் செப்பெனில்
முத்துநாகரிக முளைகண்ட தெவ்வினம்?
தமிழரின் தோற்றமும் பரவலும், தரையினில்
குமரிக் கண்டநாள் கூறுக என்றால்
வையாபுரியின் கைகளா எழுதும்.

பொய்புரட் டாரியர் கையடையாகிய
ஆங்கிலர்க் குண்மை பாங்கு தெரியுமோ?
ஓங்கியே அவர் உண்மை காணினும்
நீலகண்டங்களின் நீளப் பரம் பரம்பரை
காலங் காலமாய்க் கண்வைத் தழிக்கையில்
மடக்குக் கத்தி விரிவது போலும்
எரிமலை யின்வாய் வெடித்தது போலும்
முத்தமிழ் நிலையப் புத்தகப் பண்ணையில்
வித்திய விளைவில் கண்டுமுதலானவன்
ந. சி. கந்தையாஎனும் நல்லவன், வல்லவன்.
தமிழ், தமிழின வரலா றனைத்தையும்
தொல்பொருள் ஆய்வின் தொகைவகை விரித்து
நிலநூல் கடல்நூல் சான்றுகள் நிறைத்தும்
தமிழ்நூற் சான்றுகள் முட்டறுத்தியம்பியும்

இலக்கிய இலக்கணச் சான்றுகள் கொடுத்தும்
பழக்க வழக்க ஒழுக்கம் காட்டியும்
வையம் வியக்க வரலா றெழுதினான்-
பொய்அகன்று மெய்க் கைஉயர்ந்தது,

குமரிநாட்டின் தமிழினப் பெருமை
நிமிரச் செய்தான், நேற்று வரையிலும்
சுரடி விட்டவர் கண்முன் காண்கிலோம்.
வளைகிற மரமெலாம் முறிவதுண்டோ?
நோய்ப்படுவோரெலாம் சாவதும் உண்டோ?
முகில்மறைப் பதனால் மலைமுகடழியுமோ?
உண்மை ஒளியின்முன் பொய்யிருள் வாழுமோ?

கந்தையாவின் சிந்தையும் செயலும்
செந்தமிழ்க்குச் சேர்த்தநூல் ஒன்றாஇரண்டா?
ஈட்டிய அறிவெலாம் ஊட்டினான்
காட்டுவோம் அவர்க்கு நன்றிக் கடனையே.

## முத்தமிழ் சக்ரவர்த்தி

வாருங்கள் வாருங்கள்
என அழைப்பர் வாய்மணக்க
வணங்கி, வந்துட்
காருங்கள் எனமுகத்தா
மரைமலர்கள் பலமலரும்
களிக்கும் கண்கள்
கோருங்கை இருக்கைஎடுத்
துவந்தளிக்கும் குடிப்பதற்குக்
குடிநீர் வெட்டி
வேருங்கை மணக்குவணம்
எனக்கீயும் ஒருகுடும்பம்
விருந்தால் துள்ளும்.

வீட்டுக்குள் மனைமக்கள்
சுற்றமுடன் மகிழ்ச்சியினில்
விம்மி மெச்சி
பாட்டுக்குள் பெற்றசுவை
கற்றசுவை பேரின்பம்
பெரிதுவப்பர்,
தேட்டுக்குள் காண்பரிதாம்
செந்தமிழ்ப் பண்பாடு
செழித்திருக்கும்
கூட்டுக்குள் அடைபடுவேன்
கூர்ந்தமிழ்ச் சக்ரவர்த்தி
குடும்பத் தாழ்வேன்'

அன்பார்ந்த அன்னையவர்
அழகின்சிரிப் பொருபாட்டின்
பெருமை சொல்வார்.
இன்பார்ந்த மனைக்கிழத்தி
எனக்குரிய சுவையமுதை
இட்டுவப்பார்
தென்பார்ந்த இருமக்கள்
புரட்சிப்பாட் டினும்எழுத
வேண்டும் என்பார்
நன்காந்து வெளிச்சிடும் நூல்
கருத்துக்களைச் சக்ரவர்த்தி
நயினார் கேட்பார்.

பொலிவுடனும் பொருளுடனும்
புலமைகள் மிகுநூற்கள்
பொருள் முட்டின்றி
மலிவுடனே வாங்குதற்கு
மனம்திருப்பித் தமிழ்மக்கள்
மனைகள் தோறும்
புலிக்குட்டி கள்போன்ற
புரட்சிசெயும் புதுநூற்கள்
அனுப்பிவைப்பார்
வலிவுடனே தமிழிளைஞர்
தமிழறிஞர் விழிப்பெய்த
வகை செய்கின்றார்.

கைத்தொழில் நூல் ஒவ்வொன்றும்
கற்றார்க்கும் கல்லார்க்கும்
கைகொடுக்கும்.
பொய்த்தொழிலைச் செய்துஉழையா
பார்ப்பனர்போல் தமிழ்க்குடும்பம்
போகா வண்ணம்.
செய்தொழிலில் சீரடைவாய்
பிறர் உழைப்பில் உயிர் வாழ்தல்
சிறவா தென்று
மெய்த்தொழிலை செயத்தூண்டும்
மேன்மையுள சக்ரவர்த்தி
வெல்க வாழ்க?

இரண்டணா நாலணா
எட்டணா என்று
திரண்டநல் நூலைத்
திராவிடர் வாழ்வில்
புரட்சிக்கு வித்தூன்றும்
போக்கில் திருல்நூல்
வறட்சிக்கு வாய்த்த
மழை!

## அவ்வை துரைசாமி

அவ்வை துரைசாமிப்
பிள்ளை அருந்தமிழின்
செவ்வை உரைசாமிப்
பிள்ளையன்றோ –இவ்வையம்
எக்களிக்கத் தந்தான்
இருந்தமிழ் நூலுரைகள்
சிக்கலின்றித் தந்தான் தெளிந்து!

புறத்தின் உரைகள்
புலனைத் திறமை
வரலாறு பேசும்
மகிழ உறவாடும்
பாட்டின் குறிப்பெல்லாம்
பண்பாட்டுச் சங்கத்தேன்
கூட்டில் விளையும் கொடை.

புறம்...புறநானூறு

நாலுக்கு நூலருமை
காட்டுவதில் நுண்ணறிஞன்
மேலுக்குச் சொல்லவில்லை
வேர்ப்பலாத் தோலுக்குள்
உள்ள சுளைகொடுக்கும்
உண்மை உழைப்பாளன்,
அள்ளக் குறையாத ஆறு.

இரவுபகல் தானறியான்
இன்தமிழைவைத்து
வரவு செலவறியான்
வாழ்வின் உரமுடையான்
தன்கடன் தாய்நாட்டு
மக்கட் குழைப்பதிலே
முன்கடன் என்றுரைக்கும் ஏறு.

கல்லாத் துறையில்லை
கற்றதைச் சொல்லிபகை
வெல்லாத் துறையில்லை
வெற்றிமிகும் எல்லாத்
துறைக்குமவன் தொல்லறிவும்
துய்ப்பதறிவும் தூய அக்
கறைக்குரிய நல்ல கரை.

முத்தமிழ் மாநாட்டில்
மூண்டெழும் கோளரிமுன்
எத்தமிழன் ஈடும்
இணையானான் எத்திசையும்

பார்ப்பனர்கள் செத்தார்
　　பழந்தமிழ்ச் சான்றுகளால்
வேர்த்தனர் வீச்சறிவினால்.

சைவத்தில் பற்றுடையான்
　　சார்ந்த உரை நூலில்
கைவைத்து நூலைக்
　　கறைசெய்பான்—பொய்வைத்த
பார்ப்பனச் சாமிநாத
　　பார்ப்பின் பதிப்புகளை
நேர்படுத்து வான்நடு நின்று.

முன்னாள் உரையா
　　சிரியர் முளைக்கவிட்ட
இந்நாள் களைகள்
　　எடுத்தெறிவான்—பன்னாள்
பழகியது போல் தமிழைப்
　　பாருக் களிப்பான்
அழகியது அன்னோன் அறிவு.

பள்ளிமுதல் பல்கலைச்
　　சாலைவரை பாங்கெண்ணிக்
கொள்முதல் செய்யுக்
　　கொடைமழை வெள்ளத்தேன்
பாயாத ஊருண்டா
　　உண்டா உரைவேந்தை
வாயார வாழ்த்தாத வாய்!

## பொன்னம்பலனார்

முன்னை பழகுதமிழ்
　　மூட்டியவர் பாரதியே,
பின்னை அழகுத்தமிழ்
　　ஊட்டியவர்—கொன்னை
வடசொற் கலப்பின்றி
　　வண்டமிழ் இன்பம்
இடச்செய்தார் பொன்னம்பலம்.

திரைப்படத் தேவைக்கு
　　சேலம்சென் றால் அக்
கறைதொண்டு காணுங்கா
　　லத்தில் நுரைபடப்
பால்பொங்கல் போலே
　　தனித்தமிழ்ப் பற்றை என்
பால் பொங்கும் பொன்னம்பலம்

தூய மறைமலையார்
  தொண்டறிவேன்; ஆனாலும்
ஏயதன் மான
  இயக்கத்தின் தாயாகக்
கொங்குநாட் டெல்லையிலே
  கொள்கையுடன் கூடிஎனில்
பங்குறுவார் பொன்னம்பலம்

விற்கத் தமிழ்கற்கா
  வீரர், விழைகல்வி
கற்கவரும் மாணவர்க்குக்
  கண்ணாவார்—கற்கத்
கனித்தமிழ்ப் பாலடைகன்
  தாம்தருவார். எற்கும்
பனிமலர்ந்தேன் பொன்னம்பலம்.

தென்னறிவி னாலே
  தெளிவிப்பார் யாவரையும்
வெள்ளறிவைப் பேசி
  விரட்டிடுவார்! உள்ளறிவைத்
தேனாக்கி வைப்பார்
  செழுந்தமிழை என்னுயிர்
ஊனாக்கி வைப்பார் உவந்து.

மகிழ்வித்தே என்னை
  மணக்குமலர்த் தென்சொல்
அகழ்வித்தே ஆன்ற
  தமிழ்ச்சொல் முகிழ்வித்தே
இங்கடடா இஃதே
  தமிழ்ப்பாட் டெனப்புகழ்வார்
பொங்குற்றே பொன்னம்பலம்!

பாடுபடா துள்ளுணர்வைப்
  பச்சைக் களிமண்ணாய்
ஓடுபடச் செய்தல்
  ஒழுங்கன்று—சூடுபடா
மண்பானை மாயும்
  தனித்தமிழ் மாண்பீந்தார்.
பொன்பானை பொன்னம்பலம்!

## செகவீர பாண்டியனார்

செகவீர பாண்டியனார்
என்னும் வேந்தர்
தென்பாண்டித் தமிழ்க்குரிய
சிறப்பு மிக்கார்

அகமார முப்பாலின்
குறள்களுக்கே
அணியணியாய்க் கதைகூறி
மேற்கோள் கூட்டி

மிசு மாறுதல்காட்டி
மேலை நாட்டார்
மெய்ப்பொருளை. சிந்தனையை
வெல்லுமாறு

பகலேறு ஞாயிறுபோல்
பொருள் விளக்கும்
பாண்டியனார் பெரும்புலமைப்
பயனைக் கொள்க.

முத்தமிழில் ஒருதமிழும்
முறையாய்க் கல்லா
மூடரெலாம் தமிழ்த்துறைக்கு
முன்னே நின்று

சத்தமுடன் ஏதோதோ
பிதற்றுவார்கள்
தப்பில்லா தொரு தொடரை
எழுதார் பேசார்

இத்தகைய இழிஞரிடை
ஈடில்லாத
இலக்கியநூல் இலக்கணநூல்
எல்லாம் கற்ற
வித்தகன்போல் அடக்கமுடன்
விளைசெய்வார் யார்?

எழுத்தெல்லாம் பாட்டாக
இசை மணக்கும்
எண்ண எண்ணத் தித்திக்கும்
இனிமை பொங்கும்!
முழுப்புலமை முச்சங்க
முதிர்ச்சி காட்டும்.

பொழிப்புலமை வேர்ப்பலாவாய்த்
 தேனைக் கொட்டும்
அழுக்காறிலா அறிஞன்
 ஆரியர்க்கோ
அண்டமுடியா நெருப்பு
 தமிழ் மக்கட்கு
விழுமருவித் தென்றலிசை
 விருந்தை ஒப்பார்!

செய்யும் நூல் ஒவ்வொன்றும்
 செந்தமிழர் வாழ்ந்திருக்கப்
பெய்யும் பெருவான் அமிழ்து!

## கா. அப்பாதுரை

எப்பாத் துறைக்கும்
 இவனோர் பழம்புலவன்
அப்பாத் துரையறிஞன்
 ஆழ்ந்தகன்ற—முப்பால்லேபா
நூலறிவு! நூறு
 புலவர்கள் சேரினிவன்
காலறிவு காணார் கனிந்து.

ஆங்கிலத்தை அண்டை
 மொழிகளினைப். பண்டைநாள்
பாங்குற வாழ்ந்த
 பலமொழியை ஈங்கிவனே
செந்தமிழ்க்குச் சேர்க்கும்
 குருதியெனச் சேர்க்கின்றான்
சிந்தனையில் யாவும் செரித்து,

விருந்தெனும் நூலை
 வெளிநாட் டமிழ்தை
அருந்தெனத் தந்தான்
 அருந்திச் செருக்குற்றேன்
எத்தனை எத்தனை
 எண்ணித் தொகுத்தீந்தான்
அத்தனையும் முத்தமிழ்க்குச் சொத்து!

சின்னஞ் சிறுவர்முதல்
 சிந்தனையில் தோய்ந்தாயும்
பென்னம் பெரியவர்க்கும்
 பித்தாக்கும் வண்ணம்
அருநூல்கள் ஈவான்
 கலைககளஞ்சி யம்போல்
வருநூலைப் பார்த்துவப்பேன் நான்!

ஆங்கிலத்தில் என்பாட்டை
 ஆரும் வியக்குவணம்
பாங்குறச் செய்தான்
 படித்தவர் பாராட்டி
வைய இலக்கியத்தில்
 வாழும்என் பேரென்றார்
ஐயமிலை அப்பாத் துரை!

அப்பாத் துரைகொண்டே
 ஆயிரம்நூல் செய்க
தப்பா துயரும் தமிழ்!

## மயிலை-சீனி வேங்கடசாமி

தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்க்கெட லாற்றா அண்ணல்
வேங்கட சாமி என்பேன்
விரிபொரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டேன்
வீங்கிட மாட்டான் கல்வி
விளம்பரம் விழைதல் இல்லான்.

தமிழுக்குத் தொண்டு செய்வோர்
தலைச்சங்க முதலாய் இன்றும்
தமிழுக்குத் தொண்டர் யார்க்கும்
தனலத்தொண்டன்; அடிமை அல்லன்
குமிழ்பகுத் தறிவியக்கம்
கொள்கையில் அசைக் கொணாத
இமயமும் தோற்கும் அண்ணல்
ஈடிலாத் திறமை ஆற்றல்!

ஒன்றினும் திரியா துள்ளம்
ஒண்டமிழ்க் குழைப்பதொன்றே
நன்றினும் நன்று என்று
துறவினை நயந்த மேலோன்.
நன்றிகெட் டதிகாரத்தை
நாடும் எவ்வரசும் அன்னார்
குன்றினும் மிகுந்த சீர்த்தி
கொண்டுயர் வளித்தார் இல்லை.

தமிழையே வணிகமாக்கித்
தன் வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்பதற்கும்
தலைமுறை தலைமுறைக்குத்

தமிழ்முத லாக்கிக் கொண்டே
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சினி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்,

அஞ்சுதல் அறியா நெஞ்சன்
அகல்வர லாறனைத்தும்
மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்.
மேம்படும் நூலாராய்ச்சி
கெஞ்சிடும் தனைத்துலக்க;
கேண்மையோ டுயர்வு செய்வான்.
எஞ்சுவ துமக்கொன்றுண்டோ
இவனை நீர் மறந்து விட்டால்?

## பாரி செல்லப்பன்

வாரி வழங்குகின்ற
வள்ளன்மை பண்டைய
பாரிக்கு மட்டுமே
பண்பன்று நேரிலே
பாரி நிலையப்
பழகுதமிழ்ச் செல்லப்பன்
கோரிப் பெறாதீவான் கொண்டு.

என்னுடைய நூற்களினை
விற்கின்ற போதெல்லாம்
தன்னுடை தாய்தமிழ்
வைத்தில்முன்னடையும்
ஆக்கமே பார்ப்பான்
அரும்பொருள் எண்ணிடான்
ஊக்கமே ஆனான் உரு.

பெண்ணீர்மை தோற்கும்
பிறைச்சிரிப்பு; அன்புள்ளம்;
தண்ணீர்மை தோற்கும்
தலைப்பணிவு! கண்ணீர்மை
காட்சியிலே கொண்ட
சினமடங்கும்; கற்றவரின்
மாட்சியிலே கொள்வான் மகிழ்வு

பிணக்குவியல் ஊடும்
பிழித்துப் பிடுங்கிப்
பணக்குவியல் தேடும்
பதராய்—கணக்கெழுதும்

கொல்லப்பன் அல்லன்,
குழந்தைமன நல்லப்பன்
செல்லப்பன் செந்தமிழின் சொத்து.

## துணைவேந்தர் மணவாளரையே சென்னை மணக்க!

அண்ணா மலைப்பல் கலைக்கழ கத்தின்
துணைவேந் தராக இருக்கையில் தூய
மாணவ மகளிர்க்கு வாய்ந்த கற்பைச்
சுவர்வைத்துக் காத்தாம் அவர்யார் சொல்லுக?
பல்கலை பலவகை மாண வர்க்கும்
நல்கலை நன்று ணர்ந்த நல்லார்;
மணவாள ராமா நுசரே என்க.

தமிழறம் ஒழுக்கம் கமழா வாழ்க்கை
நமதன் றேநம தன்றே என்னும்
மணவாளரைச் சென்னை
மணக்க வேண்டும் வையம் மகிழவே.

## திரு மணவாளராமானுசர் வேண்டும்

சென்னைப் பல்கலைக் கழகம் சிறக்க
என்னை உடைய எழிற்றமிழ் சிறக்கத்
துணைவேந்தர் நல்லராய்த் தோன்றுதல் வேண்டும்
மணவாள ராமா நுசர்போல்
குணவாளர் உண்டோ கூறுக குயிலே.

## நாமக்கல் இராமலிங்கம்

நாமக்கல் ராமலிங்கம்
பிள்ளை நலிவின்றி
மாமக்கள் காண
வரைந்தளித்தான்—ஆம், அத்
'தமிழன் இதயம்'
மலைக்கள்ளன்' சங்கத்
தமிழன்பில் உள்ளம்
தளிர்த்து.

இன்னலுறும் செந்தமிழ்க்
கிந்நாள் புரிகின்ற
சின்ன பணியும்
திருப்பணியாம் என்னில்நம்

நாமக்கல் ராமலிங்கம்
நறுப்பணியை
நாமிகவும் போற்றுகிறோம்
நன்று.

## கலைவாணர்

எண்ணும் கருத்தினர்க் கெல்லாம்—தன்
ஏற்ற நடிப்புத் திறத்தால்
நண்ணும் நகைச் சுவையோடு—பல
நல்ல கருத்துகள் ஈவான்
பண்ணும் குறும்புகள் எல்லாம்—சொலும்
பகுத்தறி வூற்றைச் சுரக்கும்
பெண்ணும் மதுர நல் பேச்சால்—இதழ்ப்
பேழை நகைமுத் துதிர்க்கும்.

கோணலை மாணலைக்காட்டி—வெறும்
கூத்தடிக்கா கலைவாணன்
காணக்கண் கூசும் கதைக்கும்—நகை
காட்டும் விருந்திசை கூட்டி
வீணட என்று சொலாமல்—சிறு
வேடத்தும் வெற்றி பொறிப்பான்.
நாணிட வைக்கும் வகையில்—கதை
நாயகனை விஞ்சும் நடிகன்.

சிரித்த முகத்தில் அழகும்—இன்பம்
செருக்கோடிருந்திசை பாடும்
அரிப்புகள் நெஞ்சிருந்தோடும்—நன்று
அன்பின் நெருக்கம் பிறக்கும்
தெரிந்திருந்தால் கலைவாணன்—தன்
திரைப்பட நாடகத் தெல்லாம்
பரிசுகள் தந்தான் நகைத்தே—நம்
பகுத்தறி வெண்ணத்தின் நாற்று!

வகை வகையாய்ச் சுவைகாணும்—வெறும்
வாய்ச்சுவை மாந்தருக்கெல்லாம்
பகைச்சுவை என்பதில்லாமல்—வாழப்
பண்ணும் சுவை நலம் காட்டி
நகைச்சுவைமட்டுமா தந்தான்—வள்ளல்
நாடக மாடியதில்லை.
தொகைதொகையாகக் கொடுத்தான்—புகழ்த்
தோளுக் குயிரைக் கொடுத்தான்!

## தமிழ்வாணன் வாழ்க

நல்லொழுக்கம் நாணயம்
    நேர்மை நடுநிலைமை
எல்லா மிருக்கும்
    எழுத்தாளன்—சொல்வேன்
அமிழ்தான சொல்லிட்டுக்
    கற்கண்டை ஆக்கும்
தமிழ்வாணன்!
    என்ன தடை?

தன்னலமோ வேம்பு!
    தமிழ்நலமே கற்கண்டு!
தன்மானக் கொள்கை
    தழுவுகின்ற—நண்பன்
தமிழ்வாணன் வாழ்க!
    தமிழ்வாழ்க! தாயாம்
தமிழ்நாடு வாழ்க
    தழைத்து!

## ஜி. டி. நாயுடு

கொங்குநா டென்றால் தமிழர்தம் வாழ்வின்
    கொள்கைகள் மேம்படச் செய்த
சிங்கமே என்றன் சிந்தையில் தோன்றும்.
    செய்தொழில் சாலைகள் தோன்றும்,
தங்கமாய் விளங்கும் பொருளியல் அறிஞன்
    சண்முகம் இன்முகம் தோன்றும்,
பொங்குமாங் கடல்மேல் ஞாயிறு போல
    தோன்றுவார் ஜி.டி. நாயுடுவே.

எண்ணமும் சொல்லும் இரண்டிலா வாழ்க்கை
    எழுதரும் தொழிலியல் அறிவு
உண்மையின் உழைப்பு திண்ணிய பொறுமை
    ஒவ்வொரு நாளுமே உலகம்
ஒண்மைகொள் புதுமை உண்டிடும் பழம்,காய்
    உயர்ச்சிசேர் பயிர்கள் யாவும்
நுண்மைசார் தன்றன் அறிவியல் மக்கள்
    நுகர்ந்திட அளிக்கும் ஓர் அறிஞன்.

செயப்படும் பொருளின் செம்மைகள் புதுமை
    செந்தமிழ் அறிவியல் திறமை
வயப்படும் வண்ணம் வாழ்ந்திடும் ஒருவன்
    வண்டமி ழகத்துளான் என்னே!

வியப்பிது வெற்றி விளைவுகள் எல்லாம்
　　விருப்பமாய் மக்களுக் கீந்தால்
பயப்படுமாறு தொல்லைகள் செய்தால்
　　பாழ்படும் அல்லவோ நாடு?

உயர்ச்சியை எய்த ஒவ்வொரு நாளும்
　　உண்மையின் உழைப்பினால் தேடும்
முயற்சியில் ஆய்வு முன்னிலைப் பொருள்கள்
　　முளைவிடும் அறிவியல் விளைவை
அயர்ச்சியால் வீழ்த்தும் அரசும் ஓர் அரசா?
　　ஐயகோ பார்ப்பனன் ஒருவன்
புயிற்சியில் காலை வைத்ததும் புகழ்வார்
　　பயன்கொளார் தமிழனை ஆள்வோர்.
நமக்கென நாடு வாய்த்திடில் கோவை
　　நல்கிய அறிஞனின் திறமை
நமக்கும்இவ் வுலக நாடுகட் காகும்
　　நலம்பல எய்துவோம் அன்றோ?
சுமந்திடும் வடக்கின் ஆட்சியை ஒப்பும்
　　துப்பிலா அடிமைகள் வீழ
இமைப்பினில் நாட்டை நமக்கென ஆக்கும்
　　ஏறுகள் படையுடன் எழுக!

## அம்பேத்கார் வாழ்க! அவர் வழிச் செல்க!

ஒருவனால் உலகு பாழ்படும் எனில் அவ்
ஒருவனை ஒழித்தல் உலகின் கடமை!

ஒரு சமயத்தால் ஓரினத்தவரின்
இருட்டெண்ணத்தால் என்றோ வகுத்த
சாதி மதத்தால் தகாவிதி முறைகளால்
மோதியழியும் இவ்வுலகெனில் அவற்றை
மோதி மிதித்தல் அழித்தல் முதற்கடன்!

நிறத்திமிர் கொண்டு நிலத்தில் புகுந்தவர்
நிறவெறி யாலே கொலைத் திருவிழாவினை
நடத்தியோர் நாகரிக மிலாதஆரியர்,
கடந்த காலக் கதைத்தொடர்ச்சியை
வேற்றுமை உணர்ச்சியை, வெற்றித் திமிரினைக்
காட்ட நினைப்பது கயமைத் தனமே!

சூழ்ச்சியால், மூடநம்பிக் கையை
வீழ்ச்சிக் குரியதாய் வேடதாரிகள்
காலம் காலமாய்க் காட்டிக் கொடுத்தே
இருபதாம் நூற்றாண்டிலும் இனப்போர்க்குரிய
கருத்து நஞ்சினைக் கலப்பதும் விளைப்பதும்
நாட்டை உலகை நலிவிப்ப தாகும்.

இரண்டா யிரமாண் டில்லா திருந்த
திரண்ட நாகரிக திராவிடர்க் கிடையில்
பொல்லாங்கனைத்தையும் புகுத்தி வெளியுள
எல்லா நாட்டவரையும் இங்கே
பாய்விரித்தழைத்த ஒரேஒரு பரம்பரை
பார்ப்பனப் பரம்பரை! ஆரியப் பதர்களே!

ஆரியர் என்ன தூய்மை யானவரா?
பூரித்துவக்கும் இந்திய ஆரியர்
அனைவரும் திராவிட அணைப்பில் பிறந்தவர்;
தினையளவும் இதில் ஐயம் இல்லை;
மாந்தநூல் இயலார் இதனையே ஒப்புவர்.

தீண்டாமைக் கொடுமை தீய்த்த பாடெலாம்
ஆண்டாண்டுதோறும் அழுதும் தீராது.
கொடுமையை நினைக்க நெஞ்சம் குமுறும்.

பாரதியார் முதல் பாரத நாட்டின்,
காந்தி அண்ணலார், பெரியார் வரையிலும்
தீண்டாமை நோய் தீண்டா வண்ணம்
பணியாய்க் கொண்டனர்—பணியில் எவர்க்கும்
அணியில் முன் நின்ற அம்பேத்காரின்

எரிமலை எண்ணமும் எழும்புயல் செயலும்
விரிவுல கத்தையே விழிப்புறச் செய்தன.

ஆரியக் கொட்டம் அடியோ டழிய
வீரியங் கொண்ட வெஞ்சின வேங்கை முன்
மதத்திமிர் அழிந்தது, சமயம் மடிந்தது,
அதற்கொரு வழி அவர் கண்டார் இந்திய
நாட்டின் உரிமைப் பேரேட்டின் சட்டம்
அமைத்தவர் ஆதலின். சாதி வேற்றுமை
குமையத் தானே குலம்உயர் வென்ற
ஆரியப் பெண்ணை மணந்தார். அதனால்
ஓர் இனம் தனி இனம் ஒட்டோம் என்னும்
தடையுடை படுவதால் உடைமையுடை படுமே.
உடைமையால் அல்லவோ உயர்வும் தாழ்வும்;
அம்பேத்கார்போல் ஆரியப் பெண்களை
நம்மவர் மணக்க நாடுருப் படுமே!

## மறைமலையடிகளார் நூலகம் வாழ்க!

எல்லா வரம்பெற்ற பார்ப்பனர்கள் எங்களிறை
பல்லா வரத்து மறைமலைநூல்—கல்லா
வரம்பெற்ற தில்லை, மறைவாகக் கற்பார்
உரம்பெற்ற தில்லை உளத்து!

எவ்வெத் துறைநூல்கள் எங்கே வெளிவரினும்
அவ்வெத் துறைநூலை ஆய்ந்தாய்ந்து செவ்வி
நலங்கொண்டு சேர்த்தநூல் நாலா யிரமும்
வலங்கொண்டு வந்ததமிழ்ச் சொத்து.

நுண்ணிய நூற்பலவும் கற்பதே நோன்பாக
எண்ணிய வாழ்நாள் எலாம்அளித்துப் பண்ணிய
செந்தமிழ்நூல் ஒவ்வொன்றும் செப்பும் கடலறிவை
பைந்தமிழைக் காக்கும் படை.

அடிகளார் பேரால் அமைந்த நூலகத்தால்
விடியலாய் வையம் விழிக்கும்!—கொடிபறக்கும்!
வாபகையே என்றழைத்து வாகை மலர்சூடும்,
நாமடைவோம் வெற்றி நடை!

## நடிகர் திலகம் சிவாசி கணேசனுக்கு வாழ்த்து

அலரி நறு முல்லை ஆம்பல்
குருக்கத்தி அல்லிஎனும்
மலரி லுயர்ந்த மலர்தா
மரைஎனல் போ லுலகில்
சிலரி லொருவர் சிறந்த
நடிகர் சிவாசி எனப்
பலரி லொருவன் பகர்ந்தேன்
தமிழ்த்தாய் மகிழ்ந்தனளே,

எகுபதி யர்க்கு விருந்தாய்
நடிப்பின் இலக்கணத்தை
மிகுபதி யாரும் வியக்க
வியக்க விளக்கியவர்
தகுபதி யான சிவாசி
கணேசர்! தமிழகத்திற்
பகுபதி னாயிரம் ஆண்டுக்
கொருத்தர் பகர்ந்திடிலே.

படிப்பென்று சென்றால் இலக்கம்
பத்தாயிரம் பார்த்தளிப்பார்
துடிப்பென்று சென்றால் தாய்பசி
நீக்கி உவப்புறுவார்
நடிப்பென்று சென்றால் அதற்குமே
நற்புகழ்நம்ம தென்பார்
மடிபொன்றிலாது சிவாசி
கணேசனார் வாழியவே!

□ □ □